1. 2. 57

# கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை

69



669
1-57
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1957
MADRAS

2 அணா

# செய்திகள்

### சர்வகலாசாலை நூற்றாண்டு விழா

சென்னை, சர்வகலாசாலை நூற்றாண்டு விழா இந்த மாதம் சென்னையில் நடைபெறுகிறது. அதை ஒட்டி நடைபெறும் நூதன கண்காட்சியை முன்னாள் பாரத நிதி மந்திரி ஸ்ரீ தேஷ்முக் திறந்து வைத்தார். கண்காட்சியில் டெலிவிஷன் நிகழ்ச்சிகள், ரேடியோ மூலம் ஓடும் மோட்டார் முதலிய அரிய காட்சிகள் இடம் பெற்றுள்ளன.

### குடியரசு தினம்

சென்னை ராஜ்யத்திலும் சென்னை நகரிலும் பல இடங்களிலும் குடியரசு தின நிகழ்ச்சிகள் சிறப்பாக நடந்தன. சென்னை ஐலண்டு மைதானத்தில் கவர்னர் தேசியக் கொடியை ஏற்றுவித்தார். தேசிய யுவர் படை, சாரண சாரணியர்படை முதலியனவற்றின் அணிவகுப்பும் நடைபெற்றது.

### புது தசாம்ச நாணயங்கள்

முக்கியமான ரெயில்வே நிலையங்களில் ஒரு நயா பைசா, இரண்டு நயா பைசா, 5 நயா பைசா, 10 நயா பைசா ஆகிய புது தசாம்ச நாணயங்கள் மூன்றாவது வகுப்பு டிக்கட் கொடுக்கப்படும் இடங்களில் பார்வைக்காக வைக்கப்படுமாம். இவை ஏப்ரல் 1-ஆம் தேதி முதல் செலாவணிக்கு வருகின்றன.

### இறக்கை அடித்துப் பறக்கும் விமானம்

இறக்கைகளை அடித்துக்கொண்டு பறக்கும் விமானம் ஒன்றைத் தயாரித்துப் பரீட்சித்துப் பார்த்திருக்கிறாராம் ஒரு ரஷ்ய நிபுணர். உயரத்திலும் வேகத்திலும் இது மற்ற விமானங்களைக்கூட மிஞ்சிவிடுமாம். விசை எண்ணெய் உபயோகிப்பதிலும் இது சிக்கனமாக இருக்கக்கூடியதாம்.

### பெட்டியில் அடைக்கக்கூடிய ஹெலிகாப்டர்

சின்னஞ் சிறிய ஹெலிகாப்டர் விமானம் ஒன்றை அமெரிக்கக் கடற்படை இலாகா தயாரித்து இருக்கிறது. ஹெலிகாப்டர் விமானம் என்றால் நடுத்தெருவில்கூட அதை இறக்க முடியும். நடுக்காடு, பள்ளத்தாக்கு, கடல் இவற்றில் விழுந்துவிட்டவர்களை மீட்க உதவும் இந்த விமானத்தை ஒரு பெட்டியில் போட்டுக்கொண்டு போகலாமாம்.


## நேரில் கண்டு மகிழுங்கள்!

டெலிவிஷன், அதிசயக் குகை, பேசும் மந்திர
மனிதன் முதலிய பல அதிசயங்கள்
நிறைந்த கிண்டி என்ஜினியரிங் காலேஜ்
கண்காட்சியில் அழகாக அமைந்துள்ள

# கண்ணன் ஸ்டால்

**171 — 172-க்கு**

**விஜயம் செய்யுங்கள்.**

# கண்ணன்

## பொருளடக்கம்

மலர்: 8 இதழ்: 3

1-2-'57


குழந்தைகளே! பக்கம் 2
நீங்களும் நானும் .. 3
ராஜாவுக்குக் கல்யாணம் 5
அந்தச் சிலை .. 7
பாழடைந்த தோப்பு .. 13
கிடைக்காத சரக்கு .. 16
உனக்குத் தெரியுமா? .. 17
முடிவு .. 18
வேடிக்கைப் புதிர்கள்! .. 23
அரச நீதி! .. 24
சைஞ சு - சூ! .. 29
பொல்லாத கிழவன் .. 35
கவியரங்கம் .. 38
தபால் பெட்டி .. 39
அட்டைப் படம்:
N. ராமகிருஷ்ணு
செய்திகள் - 2-அட்டை

வருஷ சந்தா (தீபாவளி மலர் உள்பட) ரூ. 4/-

கலைமகள், கண்ணன், மஞ்சரி மூன்றும் சேர்ந்த குடும்பச் சந்தா (மலர்கள் உள்பட) ரூ. 14/4

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

### இரண்டுக்கும் நடுவில்



# குழந்தைகளே!

பொங்கல் வாழ்த்துக்கள் அனுப்பிய குழந்தை நேயர்களுக்கெல்லாம் இதன் மூலம் என் நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். என்னால் முடிந்தவரையில் முயன்றும் சிலருக்குத்தான் பதில் எழுத முடிந்தது. மற்றவர்கள் இதையே என் பதில் கடிதமாக எண்ணி என் நன்றியை ஏற்றுக்கொள்ளும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

பொங்கல் இதழில் ஆரம்பமான பரிசுத் தொடர்கதையின் தொடக்கமே உங்களை வெகுவாகக் கவர்ந்துவிட்டதை அறிந்து மகிழ்ச்சியுறுகிறேன். போகப் போக, கதை பிரமாத விறுவிறுப்புடனும் சுவாரஸ்யத்துடனும் செல்கிறது. அதே போலத்தான் மற்றொரு கதையும் அமைந்திருக்கிறது. சைனு சு-சூ விரைவில் முடிந்துவிட இருப்பதால் அதற்குப் பிறகு அதை வெளியிடலாம் என்பது எங்கள் எண்ணம். அதை முன்னிட்டுத்தான் அதை இப்பொழுது தொடங்காமல் நிறுத்தி வைத்திருக்கிறேன். இரண்டு தொடர்கதைகளுக்குமேல் ஒரே சமயத்தில் வெளியிடுவது அத்தனை சரியல்ல. ஆகவே கொஞ்சம் பொறுத்திருக்குமாறு உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

தொடர்கதைப் போட்டியில் பரிசு பெற்று, நம்முடைய பாராட்டைப் பெற்ற இரண்டு இளம் கல்லூரி மாணவர்களுடைய புகைப் படங்களையும் மூன்றுவது அட்டைப் படத்தில் காணலாம்.

இந்தப் போட்டியில் இரண்டாவது பரிசு தரப்படவில்லையே என்று பலருக்குக் குறை உண்டு என்பதை நான் அறிவேன். அப்படிக் கொடுப்பதென்றால் ஐந்து பேர்களுக்குமேல் கொடுக்கவேண்டும். அவற்றைத் தொடர்ந்து வெளியிடவும் வேண்டும். அது சாத்தியமில்லாததனால் முதற் பரிசோடு நிறுத்திவிட வேண்டியதாயிற்று. நேயர்கள் சௌ.ராஜன், தங்கமணி, பூவண்ணன், வி. பொன்னுசாமி, ஹேமலதா, மேரியண்ணு, விசுவநாதன், கண்மணி முதலியவர்கள் அந்த வரிசையில் வருகிறார்கள். இத்தனை பேரும் முதல் பரிசு பெறாவிட்டாலும் இரண்டாவது பரிசுபெறத் தகுந்தவர்கள் என்று பஞ்சாயத்தார்கள் கருதினார்கள். பரிசுப் போட்டியின் முடிவை விரைவில் வெளியிடமுடியாமல் திணறினார்கள் என்று சொல்வதுகூடப் பொருந்தும். மேலே சொன்ன அன்பர்களுக்கெல்லாம் என் பாராட்டுகளை இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

வழக்கம்போல அடுத்தபடியாக ஒரு சித்திரப் போட்டி ஒன்றை வெளியிட எண்ணுகிறேன். பலர் இந்தப் போட்டியை ஆவலுடன் எதிர்நோக்கியிருக்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியும். கதை எழுதுகிறவர்களுக்கு மட்டும் சந்தர்ப்பம் கொடுத்துவிட்டு, சித்திரம் வரைவதில் ஆசையும் ஆர்வமும் உள்ளவர்களை விட்டுவிட எனக்கும் விருப்பமில்லை. இதுபற்றி விரைவில் விளம்பரம் வெளியிடுகிறேன்.

கண்ணனில் வெளிவரும் புதிய அம்சங்கள் பலரை வெகுவாகக் கவர்ந்திருக்கின்றன. கடிதங்கள் அதிகமாகக் குவிவதிலிருந்தே இதை நான் உணர முடிகிறது. பெயர் வெளியாவதை முன்னிட்டு மட்டும் நீங்கள் எழுதவில்லை என்று எண்ணுகிறேன். நேரிடக் கேட்டு, பதில் பெறுவதில் ஓர் இன்பம் இருப்பதால்தான் இத்தனை உற்சாகம் உங்களுக்கு உண்டாகிறது என்று நினைக்கிறேன்.

எப்படியிருந்தால் என்ன? உங்களுடைய உற்சாகம்தான் என்னுடைய முதல் லட்சியம். அது அமோகமாகப் பெருகி வளரட்டும்! உற்சாகம் தானே உள்ளத்துக்கு உரம்?

—ஆசிரியர்.

# நீங்களும் நானும்

[உங்களோடு நேரிடப் பொழுது போக்கவே இந்தப் பகுதியை ஆரம்பிக்கிறேன். பல நாட்களாக நீங்கள் கேட்டு வரும் இந்தப் பகுதியில் உங்களுக்குத் தோன்றும் சந்தேகங்களையெல்லாம் கேட்கலாம். எனக்குத் தோன்றியவைகளைச் சொல்கிறேன். பிறரைப் புண்படுத்தாத முறையிலும், கூடுமானவரையில் உங்களுக்குப் பயன்படக்கூடிய கேள்விகளாகவும் கேளுங்கள். —ஆசிரியர்.]

**சுகுமாரன், சென்னை-5**

கே: புத்திசாலியான பையன் யார்?

ப: அப்பாவுக்கு அயல் வீட்டுப் பையன். உனக்கு நீ. உன் அம்மாவுக்கும் அப்படியே. உன் வாத்தியாருக்கு மார்க்குகள் வாங்கும் மாணவன்.

**ரா. தங்கசாமி, வேலூர் (வ.ஆ.)**

கே; நேருவுக்குப் பிறகு இந்தியாவுக்குத் தலைமை வகிக்கக் கூடியவர் யார்?

ப: அப்படி இரைந்து கேட்காதே, தமக்குப் பிறகு என்று எண்ணுவதே நேருவுக்குப் பிடிக்கவில்லை. தன்னலமின்மை, உயர்ந்த லட்சியம், தேசபக்தி, தியாகம், நிர்வாகம், மதியூகம் எல்லாவற்றிலும் சிறந்தவர் ஜயப்பிரகாஷ் நாராயணன். அவசியம் ஏற்பட்டால் அவரால் எந்த உயரத்தையும் எட்டமுடியும்.

**டி. டி. வாசுதேவன், சேத்துப்பட்டு**

கே: டெலிவிஷனைக் கண்டுபிடித்தவர் யார்?

ப: 1926-இல் பெயர்ட் என்பவர் தான் முதன் முதலில் கண்டுபிடித்தார். அதற்குப் பிறகு பலர் பல மாறுதல்களைச் செய்து இன்றுள்ள டெலிவிஷனைச் செய்திருக்கிறார்கள். இப்போது கிண்டி கண்காட்சியில் டெலிவிஷன் அமைத்திருக்கிறார்கள்.

**ஆர். பி. வேலாயுதம், மதுரை**

கே: பேய், பிசாசுகள் இருப்பதாக நம்புகிறீர்களா?

ப: நம்புவது இருக்கட்டும்; பார்த்திருக்கிறேன்; சினிமாக்களில்.

**கி. கலியபெருமாள், ஆக்கூர்**

கே: வானொலியைப் பற்றி சிறு குறிப்புத் தருவீர்களா?

ப: ஒலி அலைகள் வானவெளியிலே ஈதர் என்ற வாகனத்தில் பிரயாணம் செய்கின்றன. அதே விதமாக வானொலி நிலையத்திலிருந்து மின்சாரக் கருவிகள் மூலம் ஒலி பரப்பப்படும் ஒலியைக் குறிப்பிட்ட இடத்திலிருந்து கேட்கும்படி செய்ய முடிகிறது. இதுதான் அதன் தத்துவம். இதைத் தனிக் கட்டுரையாகக் கூறினால்தான் புரியும். சிறு குறிப்புப் போதாது.

**கே. நடராஜன், ஆம்பூர் (வ.ஆ.)**

கே: நீங்கள் ஓய்வு நேரங்களில் என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்?

ப: அதையெல்லாம் கேட்டால் என்பாடு கொஞ்சம் திண்டாட்டம் தான். ஏனெனில் நான் ஓய்வு நேரங்களில் முக்கியமான வேலைகளைச் செய்வதும் அலுவல் நேரங்களில் ஓய்வும் எடுத்துக்கொள்வதும் எல்லாம் அம்பலமாகிவிடுமே!

**பா. ராஜசேகரன், பாண்டிச்சேரி**

கே: உலகத்தைத் தவிர வேறு எந்தக் கிரகத்திலும் மனிதன் வசிக்கவில்லையா?

ப: இல்லை. செவ்வாயில் சில உயிர்வகைகள் இருக்கக் கூடும் என்று சில விஞ்ஞானிகள் நம்புகிறார்கள்.

**எ. மரியநாதன், ஆனைதாண்டவபுரம்**

கே: கண்ணன் பத்திரிகையை வாரப் பத்திரிகையாகக் கொண்டு வரத் தங்களால் இயலுமா?

ப: இயலும்; ஆனால் அவசியமா என்பதுதான் கேள்வி.

**பி. சுவாமிநாதன், வேலூர்(வ.ஆ)**

கே: ஒரு நாட்டில் ஒவ்வொரு மனிதனும் தலைநிமிர்ந்து வாழ, பணம் முக்கியமா அல்லது குணம் முக்கியமா?

ப: குணமே ஒரு சிறந்த நிதி என்று நீ கேள்விப்பட்டதில்லையா?

**பி. எஸ். பிரபாகர், சென்னை-5**

கே: உலகம் சுற்றும்பொழுது அதிலுள்ள பொருள்கள் யாவும் இடம் மாறத்தானே செய்யும்? அவ்வாறிருக்க ஓரிடத்திலிருந்து புறப்பட்ட விமானம் ஆகாய வழியாகக் குறிப்பிட்ட இடத்தை அடைகிறதே, அது எவ்வாறு? அந்த விமானம் வருவதற்குள் குறிப்பிட்ட ஊர் மாறியிருக்காதா?

ப: ஊர், பூமியிலிருந்து பெயர்ந்து ஓடுகிறது, சுற்றுகிறது என்று நீ நினைக்கிறாயா? இல்லை. பூமியும் அதன் ஆகர்ஷண சக்திக்கு உட்பட்ட வானவெளிப் பொருள்களும் ஒரே வேகத்தில்தான் இயங்குகின்றன. எனவே எதுவும் இடம் மாறுவதில்லை. பூமி மட்டும் சுற்றுகிறது; அதிலிருந்து புறப்பட்ட விமானம் என்ன பறந்தாலும் சுற்றுவதில்லை என்று எண்ணிக்கொள்ளாதே. எல்லாம் ஒரே இயக்கமாகத்தான் சுற்றிக்கொண்டிருக்கின்றன.

**எம். அநுசூயா, சென்னை-5**

கே: இப்பொழுது இந்தியாவின் மிகச் சிறந்த பாட்ஸ்மேன், பௌலர் யார் யார்?

ப: மன்காடு; குப்தே.

**கே. சேகரன், திருச்சி**

கே: ஆச்சாரிய விநோபா பாவே அவர்களைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

ப: பல மொழிகளைக் கற்றும் பாமரனாக வாழவேண்டும் என்று. அவர் உத்தமர். காந்திஜியின் ஆத்மிக முறையைப் பின்பற்றி மக்களுக்குச் சேவை புரிபவர்.

**என். மீனாக்ஷி, மாயூரம்**

கே: ஈரச் சுவரில் மின்சாரம் பாய்ந்தால் ஷாக் அடிக்குமா?

ப: அடிக்கும்.

**வி. பார்வதி, சென்னை-16**

கே: நீங்களும் நானும் என்ற பகுதியில் பயனுள்ள கேள்விகளைத் தான் கேட்கவேண்டுமென்றால் என்ன பொருள்? கேட்கக்கூடிய கேள்விகள் எல்லாமே நமக்குப் பயன்பட்டு விடுமா?

ப: சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்வதும் பயனுள்ளதுதான்.

**எஸ். ஏ. எம். முஸம்மலு, பேருதனியா (இலங்கை)**

கே; இந்தியப் பிரதமர் நேருவின் மாதச் சம்பளம் எவ்வளவு?

ப: பிறர் சம்பளத்தைக் கேளாதே; உன் சம்பளத்தைச் சொல்லாதே.

**எல். சந்தானம், கும்பகோணம்**

கே: ஸேப்டி-பின் என்ற ஊக்கை முதல் முதலில் யார் கண்டுபிடித்தார்கள்? எப்போது?

ப: வால்டர் ஹண்ட் என்ற அமெரிக்கர் நூறு வருஷங்களுக்கு முன்பு. அதுமட்டுமல்ல; இன்னும் எத்தனையோ அதிசயக் கருவிகளையும் அவர் கண்டுபிடித்திருக்கிறார்.

**கே. வரதராஜன், தஞ்சாவூர்**

கே: மாடுகள் குடையையோ, சிவப்புத் துணியையோ கண்டால் மிரளுகின்றன. ஏன்?

ப: மாடுகள் அப்படி மிரளுவதே இல்லை. ஏனெனில் அவை நிறக் குருடு என்று ஒரு பிராணி நிபுணர் கூறுகிறார்.

**ஆர். எஸ். கமலா, ஆர்.எஸ்.புரம்**


கே: சுவாமிக்கு மாலை சாத்துகிறார்களே, அது வெறும் அழகுக்கு மட்டும்தானே?

ப: மேடையிலேறிப் பேச வருபவர்களுக்கெல்லாம் மாலை போடுகிறார்களே, அது வீணுக்குத்தானே?

**வி. எம். விட்டல் ராவ், சேலம்**

கே; மறு பிறப்பு என்பது உண்மையா, கற்பனையா?

ப: உண்மையாக இருக்கக்கூடும் என்றுதான் தத்துவ சாஸ்திரிகள் கருதுகிறார்கள். அரைகுறைப் பகுத்தறிவாதி எதையெடுத்தாலும் கற்பனை என்று சொல்லுவதைப் பாஷாணக எண்ணுகிறான். நடுவில் அகப்பட்டுக்கொண்டு திண்டாடுகிறார்கள் சிலர்.



# ராஜாவுக்குக் கல்யாணம்

'சசிதேவன்'

ராஜாவுக்குக் கல்யாணம்
ராஜியமெங்கும் கொண்டாட்டம்!
வீதிகள் தோறும் பந்தல்களாம்
வீடுகள் தோறும் தோரணமாம்;
சாலைகள் தோறும் வளைவுகளாம்
சந்திகள் தோறும் வாழைகளாம்
பாதைகள் தோறும் விளக்குகளாம்;
பகலும் இரவும் தெரியாதாம்.
கண்ணுக் கினிய காட்சிகளாம்
காதுக் கினிய பாடல்களாம்.
வந்தவர் போனவர் யாவர்க்கும்
வகை வகையாக விருந்துகளாம்!
பாலும் பழமும் ஏராளம்
பட்சண வகைகள் தாராளம்.
வேண்டிய மட்டும் உண்டிடலாம்
வீட்டுக்கும் கொண்டு சென்றிடலாம்;
ராஜாவுக்குக் கல்யாணம்
ராஜியமெங்கும் கொண்டாட்டம்!
"ஆகா! இதுபோல் கல்யாணம்
அவனியில் யாரும் கண்டதில்லை.
உலகில் இதுபோல் விருந்துகளை
ஒருவரும், என்றும் உண்டதில்லை"

என்றே மக்கள் புகழ்ந்தனராம்;
இதயம் கனிய வாழ்த்தினராம்.
கல்யாணம் மிக ஜோராச்சு;
கஜானுப் பணமும் தீர்ந்தாச்சு!
திருமணம் முடிந்த மறுவாரம்
தெருவில் ஒருவன் முரசறைந்தான்:
விஷயம் யாதென மக்களெல்லாம்
வினவியபோதுஅவன் சொன்னதிது:
"அரசர் கையில் பொருளில்லை;
அதனுல் மக்கள் எல்லோரும்
கூடுதலாகச் சில வரிகள்
கொடுத்திட வேணும் அரசர்க்கு."
அறிக்கையைக் கேட்ட மக்களெல்லாம்
அதிர்ச்சி அடைந்ததும் அதிசயமோ?
திருமணம் கண்டு களித்தவர்கள்
திடுக்கிட்டதிலே வியப்புண்டோ?
வகைவகையாக உண்டவர்கள்
வயிற்றில் புளியும் கரையாதோ?
வாழ்த்திய வாய்கள் வைதனவே
வசவும் வார்த்தையில் அடங்காதே.
ராஜாவுக்குக் கல்யாணம்
ராஜியமெங்கும் திண்டாட்டம்!



பரிசுத் தொடர்கதை




## 2. பாழும் மண்டபம்

கைகள் சளைத்து விட்டன சுரேஷுக்கு. இதுவரை ஒரு மைல் தூரம் நீரை எதிர்த்து நீந்தி எதிர்க்கரையை அடைந்து பழக்கம் இருந்திருந்தாலும், தற்போது விதி சதி செய்தே விட்டது.

எவனொருவன் முதற்பரிசுக் 'கப்'பைத் தட்டிச் செல்வான் என்று யாவரும் எதிர்பார்த்தனரோ அவனுக்கு ஆபத்து.

எதிர்க் கரையை அடைய இன்னும் சில கெஜ தூரமே இருந்தன. ஆயினும்...

என்ன ஆகுமோ என்ற திகிலுடன் படகோட்டிகள் இன்னும் துரிதமாகப் படகுகளை செலுத்திக் கொண்டிருந்தனர். ஆனால் அவர்களுக்கும் சுரேஷுக்கும் இடையே அதிகமான இடைவெளி இருந்ததே...

எதிர்பாராத சம்பவங்களும் சில சமயம் நடந்து விடுகின்றன!

சுரேஷின் கைகளின் பாதிப் பாகமும் தலையின் மேல்பாகமும் மட்டும்தான் நீர்மட்டத்திற்கு வெளியே தெரிந்தது. ஒரு விநாடி...

சுழலின் வேகம் அவனை முழு வேகத்துடன் தரையில் செருக முயன்றுகொண் டிருந்தது, சுரேஷுக்கும் அதற்குமிடையே ஒரு பெரும் போராட்டம். சோர்வடைந்த சுரேஷின் கைகள் தண்ணீருக்குள் வேகமாக இறங்கிக் கொண்டிருந்தன.

தளக்...

குபுக்...

சுரேஷ் மூழ்கியே விட்டான்..!

இந்தச் சமயம்தான் அதிசயம் நிகழ்த்திவிட்டது ஜிம்மி.

கண் மூடிக் கண் திறப்பதற்குள் மாபெரும் நிகழ்ச்சி ஒன்று நடந்து விட்டது.

ஆம்..

பின்னல் படகுகளின் முன்பு வந்துகொண்டிருந்தது ஹம்ஸா. அதில் இருந்த ஜிம்மிக்குத் தன் நண்பனின் நிலைமை புரிந்துவிட்டது. ஒரே கணந்தான்.

தண்ணீரில் மூழ்கிய அது 'கும்' என்று எழுந்தது மட்டத்தின்மேல். சுரேஷ் மூழ்கிய இடத்தை நோக்கித் தண்ணீரைக் கிழித்துக் கொண்டு பறந்து வந்தது.

மறு நொடியில்.

சுரேஷ் மூழ்கிய அதே இடத்தில் ஜிம்மியும் மூழ்கிவிட்டது. பிரேதக் களை படர்ந்த முகங்களையுடைய ஜனங்கள் காரணம் புரி

யாமல் விழித்துக்கொண் டிருந்தனர். ஆம்..

சிறந்த நாயைவிட உயிர்த் தோழன் வேறு யார்தான் இருக்க முடியும்? ஜிம்மி எவ்வாறுதான் சுரேஷைக் காப்பாற்றப் போகிறதோ என்று வியப்புடன் பார்த்துக்கொண் டிருந்தனர்.

சில விநாடிகள் ஒரு மாறுதலையும் காணோம்.

கிட்டத்தட்ட சுரேஷ் மூழ்கிய இடத்தை அடைந்துவிட்ட படகோட்டிகள் திகைத்து நின்றுவிட்டனர், மேல் நிலவரம் தெரியாமல்.

அதிசயம் நிகழ்த்திவிட்டது ஜிம்மி.

நீர் மட்டத்திற்குக் கீழே இறங்கிய ஜிம்மி தனது உறுதியான பற்களால் சுரேஷின் பனியனின் கழுத்துப் பட்டையைப் பிடித்து விட்டது ஜாக்கிரதையாக.

அப்படியே தனது முழுப் பலத்துடன் சுரேஷை இழுத்தது.

'உண்மை நிறையைவிட, நீருக்குள் ஒரு பொருளின் எடை குறையவே செய்வதுபோல் தோன்றும்' என்ற 'ஆர்கிமிடீ'ஸின் நீர்த் தத்துவம் அதற்குத் தெரியுமோ என்னவோ! ஆனால் தனது அநுபவ முறையை உபயோகிக்கத் தெரிந்து விட்டது ஜிம்மி.

கண் மூடிக் கண் திறப்பதற்குள் ஜிம்மி, சுரேஷை கரையின் அருகிலுள்ள பாறையில் கொணர்ந்து சேர்த்துவிட்டது.

தனது கடமையைச் செய்து விட்டது ஜிம்மி.

தூரத்தில் ஜனங்கள் செய்து கொண்டிருந்த ஆரவாரம் அதன் காதில் எட்டியதோ என்னவோ!

வெற்றி முறுவலுடன் அது சுரேஷின் நிரந்தரப் பாதுகாப்பிற்கு வழி வகை செய்வதில் ஈடுபட்டுக்கொண் டிருந்தது.

கழுத்துப் பட்டையைப் பிடித்த வண்ணம், பாசி பிடித்த அந்த அகலமான பாறையில் இழுத்துப் போட்டு விட்டது.

தீயதிலும் நன்மை என்பார்கள். பாறையின் மேல் படிந்திருந்த பச்சைப் பாசியின் சுபாவம் ஜிம்மியின் முயற்சிக்குச் சாதகமே செய்தது.

* * *

எதிர்க்கரையில் கலெக்டர் 'மைக்'கில் பேசிக்கொண் டிருந்தார். "நம்மைப் பெரிய இக்கட்டிலிருந்து கடவுள் காப்பாற்றி விட்டதற்காக நன்றி கூறுகிறோம். நேதாஜி மாணவர் மன்றத்தின் தலைமைக் காரியதரிசியும், நீச்சலில் இந்த வட்டாரத்திலேயே சிறந்தவன் என்று பெயர் எடுத்தவனும் ஆன சுரேஷுக்கு நேரிட இருந்த பேராபத்து நீங்கிவிட்டது, இறைவனின் எல்லையற்ற கருணையால். நீச்சலில் பங்கெடுத்துக்கொள்ளாவிட்டாலும், உடன் சென்ற படகில் அவனைப் பின் தொடர்ந்த, ஆல்சேஷியன் இனத்தைச் சேர்ந்த ஜிம்மி தனது கடமையைச் சரியான சமயத்தில் செய்து விட்டது குறித்து மகிழ்ச்சி அடைகிறோம்.

"தற்போது நடந்த நிகழ்ச்சிகளை, இதுவும் முன்னேற்பாடாகச் சுரேஷ் ஏற்பாடு செய்திருந்த ஜல வேடிக்கைகள்தானோ என்றும் நம்மில் பலர் எண்ணிக் கொண்டிருக்கின்றனர். மற்றும் ஒரு சந்தோஷச் செய்தியைக் கூற விரும்புகிறேன். சுழலில் சிக்கிச் சற்றுத் தடங்கல் ஏற்பட்டிருந்தாலும் சுரேஷ் தனது திறமையினால் முதற் பரிசு பெறுவதற்கு அருகதையாகிறான்" என்று அவர் கூறி முடிப்பதற்குள் பலத்த வரவேற்புடன் கரகோஷம் எழுந்தது அவர்களிடையே.

* * *

அதே சமயத்தில் படகோட்டிகள் இரண்டாம் முறை சோதனைக்கு ஆளாகியிருந்தனர். ஆம்..ஜிம்மி தன் பங்கைச் செய்து முடித்துவிட்டாலும் படகோட்டிகள் அவர்களது உதவியைச் செய்ய இயலாத நிலையிலேயே இருந்தனர்.

சொல்லி வைத்தது போல் போட்டியில் ஈடுபட்டிருந்த இன்னும் சில இளைஞர்களும் ஒரு குறிப்பிட்ட இடத்தை அடைந்ததும் முன்னேற முடியாமல் தவித்தனர். படகுகளுக்குச் சரியான வேலை.

மேலும்....

அவர்களுக்கும், சுரேஷ் படுத்திருந்த பாறைக்கும் இடையே உள்ள நீர்ப் பரப்பு மிகவும் கடுமையாக இருந்தது. மிகுந்த வேகத்தோடு பாய்ந்துகொண்டிருந்த நீரோட்டத்தை எதிர்த்து நீந்துவது செயற்கரிய செயலாயிருந்தது. படகுகள் அந்த இடத்தைப்பற்றி நினைக்கவும் முடியாத நிலை. வெளியே தெரிந்தும் தெரியாமலும் எண்ணற்ற பாறைகள். படகில் உள்ள உதவி ஆட்கள் நீந்தியும் செல்ல முடியாத செருகலாக இருந்தது அந்த இடத்தில்.

பெரிய மடு.. சென்ருல் மீள முடியாத இடம். ஆனல் சுரேஷைபோ படகுக்குக் கொணர்ந்தாக வேண்டும்.

ஜிம்மி, தன் நண்பனுக்கு ஸ்மரணை வரச் செய்வதற்கு முயற்சிகள் செய்துகொண்டிருந்தது. பட்டுப் போன்று மிருதுவான தனது வாலினல் அவனது முகத்தில் சில முறை தடவிக் கொடுத்தது. பின்பு மெதுவாக, அவனது கையில் தனது முகத்தை வைத்துத் திருப்பியது. அதன் செய்கையும் முடிவில் பலனைக் கொடுத்துவிட்டது.

நேரம் சென்றுகொண்டிருந்தது. நான்கு மணியும் ஆகி, மேலே ஐம்பது நிமிஷங்களும் சென்றன.

சுரேஷ் ஜிம்மியின் செய்கைகளால் உணர்வடைந்தான். தான் எங்கிருக்கிரும் என்பதே முதலில் புரியவில்லை. சற்று நேரம் எழுந்திருக்கலாமா வேண்டாமா என்றே தயங்கினன். பின்பு மெதுவாக எழுந்தான். வலது காலை அசைக்க முடியவில்லை. பாறைகளினிடையே மோதப்பட்டதால் ஏற்பட்ட அடி, 'விண்விண்' என்று தெறித்தது. சற்று நேரம் சென்றது. தான் ஆபத்தில் சிக்கியது, ஜிம்மி காப்பாற்றியது எல்லாம் ஏதோ கனவு போல் நினைவுக்கு வந்தன. தான் பாறையில் படுத்திருப்பதை உணர்ந்த பின்தான் யாவற்றையும் நிஜம் என்று நம்பினன்.

இப்படியே படுத்துக்கொண்டிருந்தால் காரியம் ஆகிவிடுமா? வெதுவாகத் தள்ளாடிய வண்ணம் எழுந்திருந்தான். படகோட்டிகளுக்கு ஏற்பட்ட அதே சங்கடம் சுரேஷுக்கும் ஏற்பட்டிருந்தது.

ஓடும் நீரில் படகை நிறுத்திக் கொண்டிருந்த ஆட்கள் சுரேஷுக்குச் சைகை காட்டினர். அதை ஒருவாறு புரிந்துகொண்டான் சுரேஷ். ஜிம்மியின் உதவியுடன் மெதுவாக மற்றப் பாறைகளின்மீது கால் வைத்துக் கரையை அடைந்தான். எதிரே அடர்ந்த நாணற்புதர்.

கையைத் தட்டி எச்சரிக்கை செய்த வண்ணம் நாணற்புதரைத் தாண்டினன் சுரேஷ். அந்தச் சமயத்தில் முன்னறிவிப்புப்போல இரண்டு மூன்று அரவங்கள் புதரிலிருந்து எட்டிப் பார்த்துக்கொண்டிருந்தன!

* * *

தைரியத்தைக் கைவிடாது முன்னேறினன் சுரேஷ். ஜிம்மி, அவனைப் பின் தொடர்ந்தது அமைதியாக.

அந்த அமைதியில் ஆழ்ந்த பொருள் பொதிந்திருந்தது என்று உன்னிப்பாகக் கவனிப்பவர்களுக்கு மட்டும்தான் புலப்படும். எதிர்காலத்தைத் திட்டவட்டமாக நிர்ணயித்துக் கூறும் நிபுணர்களுக்கு அந்த அமைதியின் - அந்த சோகத்தின் - காரணம் நன்கு புரியும்.

ஜிம்மி, மனிதனினும் கீழ்ப்பட்ட இனத்தைச் சேர்ந்ததாகக் கருதப்பட்டாலும் அதற்கும் சில அபூர்வ குணங்கள் இருக்கவே செய்தன.

இதையொட்டித்தான் நமது முன்னேர்கள் பிராணிகளின் நடமாட்டத்தைக் குறித்துச் சில காரணங்கள் கூறுகின்றனர் போலிருக்கிறது.

காகம் இடைவிடாது கரைந்தால் ஏதாவது விருந்து வருவதாயும் பூனைக் குறுக்கே சென்ருல் காரியம் அபஜயமும், நோயாளி இருக்குமிடத்தின் அருகில் நாய் ஊளையிட்டால் எமன் வருவதை அறிவிப்பதாயும் கூறுவதன் பொருள் இதுதானே?

ஆம்....

"உன் தோழனை என்னிடமிருந்து தப்புவித்துவிட்டாய். ஆனல் என் காரியம் முடிந்துவிடவில்லை. அதற்

குப் பதில் உன்னேயே நான் மறு முறை சந்திக்க விரும்புறேன்''




என்று காலனே அந்த உயர்ந்த, உண்மையான ஜிம்மியுடன் சம் பாஷணை செய்துகொண் டிருப்பதை யார் அறிய முடியும்?

நெடுந்தூரம் சென்ற பிறகுதான் சுரேஷ் தன் பாதையை உணர்ந் தான். படகுத் துறையை அடை வதற்குக் கடும் முயற்சியே செய் தாக வேண்டும் என்பதைத் தெரிந்துகொண்டான். இடையே சப்பாத்திப் புதர்களும், ஏராள மான பாம்புப் பொந்துகளும் தென் பட்டு அவனேப் பயமுறுத்திக் கொண்டிருந்தன. இதுவரை மனித நடமாட்டமே காணுத அந்தக் காட் டுப் பிரதேசத்தில், புது மனிதன் தங்களது விரோதி ஒன்றுடன் அங்கே முன்னேறுவதைக் கண்டு அந்த மயான அமைதி குலேயத் தொடங்கியது! மரங்களிலிருந்து குரங்குகள் விநோதமான குரலில் கத்திக் கொண்டு தனது சகபாடி

களுக்கு எச்சரிக்கை செய்தன. பறவைகள் 'கீச்' சென்று கத்திக்கொண்டு பறந்துகொண் டிருந்தன. சுரேஷ் ஒன்றையும் லட்சியம் செய்யாது நேர்ப்பாதையைக்கண்டு பிடிப்பதிலேயே முழுக் கவனத்தையும் செலுத்திக் கொண் டிருந்தான்.

கடைசியில் ஓர் உண்மை புரிந்தது அவனுக்கு. அவன் செல்லவேண்டிய துறை ஆற்று மார்க்கமாக இன்னும் சில கெஜ தூரமே இருந்தாலும், தரை வழியாக நெடுந்தூரம் காட்டினுள்ளே சென்று, பிறகு அதே தூரம் ஆற்றை நோக்கி மறுபடியும் வந்தாக வேண்டும் என்பதுதான் அது.

ஆதவன் மலைவாயில் விழுந்துகொண் டிருந்தான். அடர்ந்த மரங்களினால் தோற்றுவிக்கப்பட்ட இருட்டு, ஆதவனது அந்தச் செய்கையால் இன்னும் அடர்த்தியாயிற்று.

பல ஜாதி மரங்கள் கம்பீரமாக வளர்ந்து அவனை எதிர்கொண் டழைப்பவைபோல் நின்றுகொண் டிருந்தன. ஆரம்பத்தில் இனந்
மொழி] நாடகத்தில் இருட்டைப்பற்றி





தெரியாத பீதி இருந்தாலும் தற்போது யாவும் அறவே நீங்கி விட்டன சுரேஷிடமிருந்து.

தான் சமீபத்தில் வாசித்த ஸ்ரீ ஹர்ஷ சக்ரவர்த்தியின் வட



‘‘டேய்! சீக்கிரமா டஸ்டர் எடுத்துண்டு வாடா’’

‘‘எதுக்குடா?’’

‘‘இந்தத் தாத்தா எப்ப பாத்தாலும் என் தலை எழுத்து, தலை எழுத்துன்னு சொல்லிண்டிருக்கார். அதை அழிக்கணும்!’

‘‘!!!!!!’’

---

வருணிக்கும் பாட்டு ஒன்று அவன் நினைவுக்கு வந்தது.

‘‘நீலகண்டனது கழுத்தைப் பழிக்கும் திறனுற்ற இந்த இருட்டு, முதலில் ஈழத் திசையை மூடுகிறது. பிறகு மற்றத் திசைகளிலும் தன் ஆதிக்கத்தைப் பரப்புகிறது. மெதுவாக மலைப் பிரதேசங்களிலும், மரங்களிலும், நகரங்களிலும் வலை வீசுகிறது. அடர்த்தியை அதிகமாக்கிக் கொண்டு, கடைசியில், மக்களது பார்வையையும் களவு கொண்டு விடுகிறது இந்த இருட்டு.’’

சப்தம் போட்டு அந்தப் பாட்டை ராகம் இழுத்தான் சுரேஷ்.

நேர்வழியை எப்படிக் கண்டு பிடிப்பதென்றே தெரியவில்லை. இந்தச் சமயம்தான் ஜிம்மி அங்கிருந்து குதிரைப் பாய்ச்சலில் பாய்ந்தது. சுரேஷுக்கு அதன் காரணம் புரிந்துவிட்டது.

சில நிமிஷங்கள் அங்கேயே தாமதித்தான். சொல்லி வைத்தாற்போல் ஜிம்மி அவனிடம் திரும்பி வந்தது. அது குதித்துக் கும்மாளமிட்டுக்கொண்டு முன் செல்ல, சுரேஷ் அதைப் பின் தொடர்ந்தான்.

கடைசியில் அவனுக்கு வெற்றி. தூரத்தில் பாழும் மண்டபம் ஒன்று தெரிந்தது.

நல்ல பசியோடு இருப்பவனுக்குப் பழைய அமுது கொடுத்தால் எவ்வளவு சந்தோஷப்படுவானோ அவ்வளவு சந்தோஷப்பட்டான் சுரேஷ். ஆம்..அவனது கால் மிகவும் கடுமையான நிலையில் இருந்தது. உட்காயமோ, அல்லது பலத்த சுளுக்கோ அவன் காலை நன்றாகப் பாதித்துவிட்டது. அத்துடன் இவ்வளவு தூரம் நடந்ததில் அவன் கால்கள் கெஞ்சின.

ஒரு வழியாக மண்டபத்தையும் அடைந்த சுரேஷ், ‘அப்பாடா’ என்று அதில் சௌகரியமான இடத்தில் படுத்துவிட்டான். இத்தனை நேரம் சற்று அடங்கியிருந்தாற் போல இருந்த வலி, இப்போது தன் சுயரூபத்தையும் காட்ட ஆரம்பித்துவிட்டது.

சில விநாடிகள் சென்றன.

ஜிம்மியின் புதுச் செய்கை அவனுக்குச் சற்றுப் புதிராக இருந்தது. தன் காதுகளைச் சாய்த்த வண்ணம் அது எதையோ உன்னிப்பாகக் கேட்டுக்கொண்டிருந்தது. திடீரென்று சுரேஷின் அருகில் வந்து அவனை முட்ட ஆரம்பித்தது. சைகை தெரிந்த சுரேஷ் மெதுவாக எழுந்திருந்தான்.

மண்டபத்தின் பின்னால் சென்றான் அவன். அப்போது தூரத்தில் ‘படபட’ வென்ற சப்தம் கேட்க ஆரம்பித்தது. வருவது ஒரு ‘மோட்டார் சைக்கிள்’ என்பது அவனுக்குத் தெரிந்தது.

ஜிம்மியுடன் அருகிலிருந்த பெரிய புதரின் பின்புறம் சென்றான். அங்கேயே தரையை லேசாகத் தட்டிவிட்டு அமர்ந்தான்.

அவன் உட்காருவதற்கும், மோட்டார் சைக்கிள் அந்தப் பாழும் மண்டபத்தை நெருங்குவதற்கும் சரியாக இருந்தது!

(தொடரும்)

# பாழடைந்த தோப்பு

ஈ. லக்ஷ்மணன்

வேணுவின் இதயம் இரண்டு விதமான சிந்தனை ஓட்டங்களால் இயங்கிக்கொண்டிருந்தது. பகைவனுக்கு உதவி புரிவதா? அன்றி மக்களைக் கொன்று மட்டுமல்ல, கொள்ளையடித்துச் செல்லும் அந்தக் கொள்ளைக் கூட்டத்தையே சின்னபின்னமாக்குவதா? இந்த இரண்டு எண்ண அலைகள் அவன் இதயப் பாறையில் முட்டி முழங்கின.

சிறிய உளி மாபெரும் பாறையை உடைத்துத் தூளாக்க வில்லையா? அற்ப மனிதன் ஆகாயத்திலேயே பருந்து போல் பறக்கக் கண்டு பிடிக்கவில்லையா? அதை எண்ணிய வேணுவின் இதயம், 'முயற்சி முடிவில் வெற்றி பெறும்' என்பதை அறிந்து பலபல எண்ணி மகிழ்ந்தது.

அந்த ஊரின் பெயர் சிவகளை. அது அவ்வளவு களை பொருந்திய ஊர்; அடர்ந்த தோப்புகளும் அழகிய பூங்காக்களும்—கண்டவர்கள் அதை இயற்கையின் உறைவிடம் என்றே கூறுவர்.

அப்படிப்பட்ட ஊரின் மேற்கே தான் அந்தப் பாழடைந்த தோப்பு உள்ளது. குன்றிமணி அழகியது தான்! அதற்கும் கறுப்பு உண்டல்லவோ? முத்து அழகியதுதான்; அதன் இருப்பிடமாயுள்ள சிப்பி நாற்றமடிக்கவில்லையா! அது போன்றுதான் அழகிய ஊருக்கு அந்தப் பாழடைந்த தோப்பும்.

வேணு தன் நண்பர்களுடன் அந்தத் தோப்புக்கு விளையாடச் சென்றான். மாலைப் பொழுது மறைந்து இருட்டு நெருங்கிக் கொண்டிருந்தது. தூரத்தில் இரண்டு மூன்று உருவங்கள் வருவதையும், தங்கள் தலைகளில் சுமையை ஏற்றி வருவதையும் கண்ட நண்பர்கள் பயத்தால் ஓடி விட்டனர். வேணுவிற்கு ஓட்டம் என்றால் வேப்பங்காய்.

நண்பர்களின்று விடுபட்ட வேணு தூரத்தில் வருவது திருடர்கள்தான் என்பதை ஊகிக்க அதிக நேரம் பிடிக்கவில்லை. அவர்கள் கையில் அகப்பட்டால் வேணு எமன் வாயில் சிக்க வேண்டியதுதான். அப்போதுதான் அவன் தோட்டத்தில் ஒளிவதற்கு இடம் பார்த்தான். பாழடைந்த தோட்டத்தின் மத்தியில் ஓர் பட்டுப் போன மரத்தின் அடிப்பாகத்தில் பெரிய பொந்து இருந்தது. அதனுள் அடைக்கலம் புகுந்தான்.

'இளம் கன்று பயமறியாது' என்பார்கள். அந்தப் பொந்தில் விஷ ஜந்துக்கள் ஏதாவது இருக்கும் என எண்ணினானா? இருந்தால் அவன் கதி என்ன?

அந்த மூன்று உருவங்களும் தங்களுக்கே உரித்தான இடத்தில் - அந்தப் பொந்து மரத்தின் முன் பக்கத்தில் அமர்ந்தனர். வேணு தைரியமாகத் தன் மூச்சை மெதுவாக விட்டபடியே கவனித்துக் கொண்டிருந்தான். கொஞ்ச நேரத்தில் மூன்று பேர்களும் தங்கள் பொட்டலங்களை எடுத்து மண்ணுள் புதைத்து வைத்துவிட்டு அதன்மேல் உட்கார்ந்து கொண்டனர்.

"அண்ணே; நாளை மதுரையிலிருந்து பிரபல வியாபாரி தனிகாசலம் செட்டியார் ரூபாய் எழுபதினாயிரத்துடன் தன் புத்தம் புதிய 'பியூக்' காரில் வருகிறாராம்" என்று எக்காளமிட்டுக் கூறினான் முதல்வன்-வஞ்சக எண்ணங்கொண்டு.

"சரி அண்ணே! விஷயத்தை ஜாக்கிரதையாக முடிக்கணும். ஆசாமியை அப்படியே சித்திரவதை செய்யணும்" என்று மிடுக்குடன் கூறினான் இரண்டாவது மனிதன்.

"நம் மூவரிடமும் ரிவால்வர் நிச்சயமாயிருக்க வேண்டும். முன்னமே நம்மைப் போலீஸில் பிடித்துக் கொடுக்கத் திட்டமிட்ட

வனல்லவா!'' என்றான் மூன்றாவது மனிதன்.

''சரி; ஆகட்டும்! திட்டம் நாளை இரவு 10 மணிக்கு இதே இடத்தில் போடலாம். இப்போது நாம் போக வேண்டிய இடங்களுக்குப் போகலாம்! நாளை இரவு 10 மணி; ஞாபகம்..'' என்று முதல்வன் கூறியதும் மூவரும் அவ்விடம் விட்டு அகன்றனர். எங்கோ?...

பொந்தை அபயமாய் அடைந்த வேணு இப்போதுதான் பெருமூச்சு விட்டான். மெதுவாக வெளியில் வந்து அந்த இருட்டில் வேகமாய்த் தன் வீடு அடைந்தான்.

வீட்டிற்கு வந்த வேணு படுக்கையில் படுத்தான். ஆனால் நித்திரை வரவில்லை. அவனது இதயத் திரையில் தணிகாசலம் செட்டியார் வந்து விழுந்தார்.

தணிகாசலம் செட்டியாரைத் தெரியாதவர்கள் நெல்லை மாவட்டத்தில் யாரும் இல்லை. பிரபல வியாபாரி; அந்தஸ்துள்ள மனிதர்; நல்ல பெயரும் புகழும் சம்பாதித்துக்கொண்டிருந்தார். பகைமையையும் ஒரு புறம் சம்பாதித்துக் கொண்டிருக்கத் தவறவில்லை. அதுவும் வேணுவின் தந்தை விஷயத்தில்தான் பெரும்பாலும் பகைமை அதிகம்.

வேணுவின் தந்தை - முதலியார்–நெல்லையில் பிரபல நெல் வியாபாரி. இவருக்கு எதிராகத்தான் செட்டியார் வியாபாரம் தொடங்கி முதலியாரிடம் வரும் சில்லறை வியாபாரிகளைத் தன்பால் வசப்படுத்தி, முதலியாரைத் தாக்க - அவர் வியாபாரத்தை அழிக்கத் திட்டமிட்டார். தம் பணத்தின் மகிமையால் முதலியாரை வரி ஆபீஸரிடம் காட்டிக் கொடுத்து, அவர் பேரில் கள்ளக் கணக்குகள் உண்டெனச் சமர்ப்பித்துக் கோர்ட் வரை இழுத்தடிக்கச் செட்டியார் தயங்கவில்லை. முதலியாருக்கு வியாபாரம் நொடித்தும் விட்டது.

செட்டியார் செய்த கொடுமை தான் இன்று வேணுவின் தந்தை முதலியார், வர்த்தகத்தை விட்டு விட்டு வக்கீல் குமாஸ்தாவாக வேலை பார்த்துத் தன் குடும்ப



வறுமையைப் போக்கிக் கொண்டிருந்தார்.

வறுமைக்குக் காரணமான செட்டியாரைப் பழி வாங்க வகை செய்வதா? மக்களைக் கொடுமைப் படுத்தும் கொள்ளையர்களை அரசாங்கத்திடம் பிடித்துக் கொடுப்பதா? 'பகைவனுயினும் உதவி புரி' என்பதை அறிந்தவன் வேணு. 'மக்களுக்குத் தீமை புரியும் எந்தக் கூட்டத்தையும் நசுக்கிப் பொசுக்கி விட வேண்டும்' என்ற எண்ணம் அவன் இதயத்தில் எழுந்தது.

மறு நாள்..; மாலை..! மேற்கு வானில் சூரியன் மெதுவாக மறைந்து மறைந்து இருளரக்கனுக்கு இடம் கொடுத்துக்கொண்டிருந்தான். வேணு தன் கையில் ஓர் பொட்டலத்துடன் அந்தப் பாழடைந்த தோட்டத்தை நோக்கி லேசான இருட்டில் - ஒற்றையடிப் பாதையில் நடந்துகொண்டிருந்தான். லேசான சல சலப்புகள் பாதையின் செடிகளில் ஏற்பட்டாலும் 'சல சலப்பிற்கு அஞ்சாத புலிக்குட்டி' போல் நடந்து தோட்டத்தினுள் அமைந்துள்ள பட்டுப் போன மரத்தின் முன்பு - முதல் நாள் அந்தத் திருடர்கள் தங்கிய இடத்தை அவசர அவசரமாய்த் தோண்டினுன். அங்கே...'

அந்தக் கிடங்கினுள் ஏராளமான நகைகளும், மற்றப் பொருள்களும் இருந்தன. அவற்றைப் பக்கத்தில் அமைந்துள்ள கிணற்றுள் போட்டு விட்டுத் தான் கையில் வைத்துள்ள பொட்டலத்தைப் பள்ளத்தில் வைத்து மண்ணை அதன் மேல் போட்டு மூடி மறைத்தான். தூரத்தில் யாரோ வரும் சப்தம் கேட்டு அந்த மரப் பொந்துக்குள் ஒளிந்து கொண்டான். திருடர்கள் வந்து அந்த இடத்தில் உட்காருவதை ஆவலோடு எதிர் நோக்கிக்கொண்டிருந்தான்.

தூரத்தில் வந்தது வேறு யாருமல்ல! திருடர்கள் மூவரும்தான்! வழக்கம்போல பேசிக்கொண்டு அந்த இருட்டிலும் தோட்டத்தைச் சுற்றிப் பார்த்து விட்டு முதல் நாள் இரவு அவர்கள் மூவரும் அமர்ந்த இடத்தில் அடுப்புக் கட்டி போல் ஒன்று சேர்ந்து உட்கார்ந்தனர். அதே சமயம்....

படார்..படார்..படார்..! மூவரையும் அந்த இடத்தினின்று சுமார் முப்பது அடி உயரத்திற்கு உயரே தூக்கிக் கீழே போட்டு விட்டது அந்தச் சப்தம். மூவரும் மூன்று திசைகளில் அதிர்ச்சியடைந்து கிடந்தனர்; கையிலுள்ள ரிவால்வர்கள் பறந்து விட்டன:

அவர்கள் உட்கார்ந்ததும் வெடித்தது 'மைசூர்' என்ற ஓர் சுரங்க வெடியாகும். கிறிஸ்துமஸ்ஸிற்காக வேணு வாங்கி வந்தான். ஆனல் அரசாங்கத்தின் தடையால் அந்த வெடி தடைப் பட்டது. வேணு வைத்திருந்தது அதே வெடிதான்.

வேணுவின் முன் எச்சரிக்கையால் நிறுத்தப்பட்டிருந்த போலீஸ் ஜவான்கள் அதிர்ச்சியடைந்த திருடர்களைத் தட்டி எழுப்பிக் கைது செய்தனர்.

மறு நாள் - பத்திரிகையில், ''பதினுறு வயதுச் சிறுவன் வேணு திருடர்களைப் பிடித்த சாமர்த்தியம்!'' என வெளிவந்தது.



ராமு: ஏண்டா கிட்டு, பொம்பளை மாதிரி அழுதுகொண்டிருக்கே?
கிட்டு: என்னை எல்லாரும் 'பொம்பளைச் சட்டி'ன்னு கேலி பண்றுடா. —ராஜேந்திரன்.




# கிடைக்காத சரக்கு

**டி. கே. ராம்**

மளிகைக் கடை மாணிக்கம் செட்டியார் சற்றுக் கரூரான பேர்வழிதான். தன் கடையில் யார் வந்து என்ன சாமான் கேட்டாலும் 'இல்லை' என்ற பதிலைச் சொல்லக் கூடாது என்று தன் கடை ஆட்களுக்குக் கண்டிப்பாக உத்தரவிட்டிருந்தார். ஒரு வேளை தேவைப் படும் சரக்கு கடையில் இல்லாது போய்விட்டாலும், அக்கம் பக்கத்துக் கடைகளிலிருந்தாவது அதைத் தருவித்து, கிராக்கிகளைத் திருப்தி செய்யவேண்டுமென்பது செட்டியாரின் கொள்கை.

இவ்வாறிருக்க, ஒரு நாள் தன் கடை ஆளான கந்தசாமி கடைக்குச் சாமான் வாங்க வந்திருந்த ஒரு கிழவியிடம், ''பாட்டி! இல்லவே இல்லை, பேருக்குக்கூட கிடையாது இங்கே!'' என்பதாகக் கூறுவதை, அகஸ்மாத்தாகக் கேட்க நேரிட்ட செட்டியாருக்குக் கோபம் பொங்கி எழுந்தது. உதடுகள் துடிதுடித்தன. பற்கள் நறநறவென கடித்துக் கொண்டன.

தன் ஆசனத்தைவிட்டு துள்ளி எழுந்த அவர், கந்தசாமியை அப்படியே விழுங்கி விடுவதுபோல் ஒரு முறை முறைத்தபின் கிழவியை நெருங்கி, ''பாட்டீ! இந்தக் கடை ஆளுக்கு ஒன்றும் சரியாகத் தெரியாது. இப்பொழுது நீ விசாரித்த சரக்கு என் கடையில் ஏராளமாகக் கிடைக்கும்; தாராளமாக வாங்கிச் செல்லலாம். எவ்வளவு தேவை உனக்கு?'' என்று பொறுமை இழந்து கேட்டார்.

செட்டியார் இவ்விதம் சொல்லுவதைக் கேட்ட அந்தக் கிழவியோ 'களுக்'கென வாய்விட்டுச் சிரித்தாளேயொழிய வேறு பதில் ஒன்றும் கூறாது வந்த வழியே போய்க்கொண்டிருந்தாள்.

பேந்தப் பேந்த விழித்தார் செட்டியார். கிழவியின் நடத்தை புரியாத புதிராகவே தோன்றியது அவருக்கு. ஏமாற்றம் ஒருபுறம், அவமானம் மற்றொருபுறம், போதாத குறைக்குக் கோபமும் உண்டாகி,

செட்டியாரை ஒருங்கே வாட்டின அந்தச் சமயம். உடனே தன் கடை ஆள் கந்தசாமியின் பக்கம் திரும்பி, "கந்தா! கிழவி பதில் ஒன்றும் சொல்லாமல் ஏன் சிரித்துக் கொண்டே செல்கிறுள்? சற்று முன்பு நம் கடையில் அவள் கேட்டதுதான் என்ன?" என்று கர்ஜித்தார் செட்டியார்.

நீண்டதோர் பெரு மூச்சுவிட்ட கந்தசாமியும் உடனே சற்றுச் சிரித்த வாறே பதில் கூற ஆரம்பித்தான்.

"விஷயம், இதுதானுங்க எசமான்! கிழவி பக்கத்து ஊரைச் சேர்ந்தவள். நம்ம ஊரிலே இப் பொழுது நடக்கும் மாரியம்மன் திருவிழாவின் நிமித்தம் இங்கே விஜயம் செய்தாள். நம் கடையில் சூடம், சாம்பிராணி வாங்கிக் கொண்டபின் என்னைப் பார்த்து, 'ஏனப்பா! உங்கள் ஊரில் மழை, கிழை ஏதாவது சமீபத்தில் உண்டா?' என்று கேட்டாள். அந்தக் கேள்விக்குத்தான், 'இல்லை' என்று நான் பதில் கூறினேன். நீங்களோ இதைத் தப்பாக அர்த்தம்கொண்டு என்னைக் கோபிக்கிறீர்கள்!"

கந்தனின் பதிலைக் கேட்ட மாணிக்கம் செட்டியாரின் முகத்தில் ஈயாட வேண்டுமே! "ஏன் இதை அப்பவே சொல்லவில்லை?" என்று மறுபடியும் அவருக்குக் கந்தன்மீது கோபம்தான் வந்தது.

---

# உனக்குத் தெரியுமா?

## விமான விபத்து

பம்பாயை விட்டுப் புறப்பட்ட ஆகாய விமானம் ஒன்றில் பலர் பிரயாணம் செய்தார்கள். அது கல்கத்தாவில் விழுந்து நொறுங்கினுல் அந்த விபத்தில் எஞ்சிய பிரயாணிகளை எந்த ராஜ்யத்தில் அடக்கம் செய்வது?

## வேகமாகப் படிப்பவர்

குண்டுமணி கம்ப ராமாயணத்தில் ஓர் அத்தியாயத்தைப் படித்து முடிக்கச் சரியாகத் தொண்ணூறு நிமிஷங்கள் ஆகின்றன. ஆனுல் குள்ள மணி அதே அத்தியாயத்தை ஒரு மணி, இருபது நிமிஷங்களில்தான் படிக்க முடிந்தது. அந்த இரண்டு பேரில் வேகமாய்ப் படிக்கக்கூடியவன் யார் என்று நீ சொல்வாய்?

## யாருக்குச் சொந்தம்?

நாங்கள் வளர்க்கும் அணில் ஒன்று பக்கத்து வீட்டு வேலிக்குள் நுழைந்து அவர்கள் வீட்டில் முட்டை யிட்டது. முட்டை எங்களுடையது தான் என்று பக்கத்து வீட்டார் உரிமை கொண்டாடினுல், அது நியாய மாகுமா?

## பின்னம் எது?

எழுதினதைத் தலைகீழாகத் திருப்பிப் பார்த்தாலும் ஒரே மாதிரியாக வரக்கூடிய பின்னம் ஒன்றைக் கூறமுடியுமா?

விடை - 3-ஆவது அட்டையில்.

# முடிவு

தே. லக்ஷ்மிநரசிம்மன்

“தம்பி, ஏன் அழுகிறாய்?”

என் கேள்வியிலே என்னதான் அப்படிப்பட்ட மந்திர சக்தி இருந்ததோ..! கேட்ட மறு நிமிடமே தன் அழுகையை நிறுத்தி விட்டு அலாதியான ஒரு பார்வையை, அதிசயப் பார்வையை என்மீது வீசினான் அந்தச் சிறுவன். பின்பு அவன் தன் கதையைச் சொல்ல ஆரம்பித்தான்:

என் பெயர் நல்ல தம்பி. பெயருக்கேற்றபடி நல்ல தம்பியாகத்தான் நான் நடந்து வருவதாக மற்றவர்கள் சொல்வார்கள். பள்ளி செல்வது, பாடம் படிப்பது, மாலை வீடு வருவது, விளையாடப் போவது இப்படியேதான் என் நடைமுறை நிகழ்ச்சிகள் இருந்தன. ஆனால் நாள் செல்லச் செல்ல ஒரு புதுப் பொறுப்பும் என்னைச் சூழ்ந்து வருவதை உணர்ந்தேன்.

எனக்குத் தந்தை கிடையாது. தாய்தான் தன் முழு வலிமையையும் எனக்காகச் செலவழித்து வந்தாள். தெருவிலே பண்டம், பலகாரம் விற்று அதில் கிடைக்கும் ஓரளவு ஊதியத்தை எனக்கும் தனக்குமாக ஆக்கிக்கொள்வாள்.

ஒரு நாள் என்னிடம் சொன்னாள். “அப்பா, நம்முடைய நிலை இப்படியே என்றும் கீழ்த்தரமாக இருக்காது என்று நம்புகிறேன். அதற்குக் காரணம் நீதான். நம்முடைய குடும்பத்தின் உயர்வும், தாழ்வும் உன் கையில்தான் இருக்கின்றன.”

எனக்கு விளங்கவில்லை. புரியாத புதிராக இருந்தது அவள் பேச்சு. “அம்மா, என்ன சொல்லுகிறாய்?” என்று கேட்டேன்.

“இன்றுபோல் தினந்தோறும் நீ நன்றாகப் படித்து வரவேண்டும். வகுப்பிலே முதலாவதாகத் திகழ வேண்டும். இப்படியே நீ படித்து வந்தால் பின்னால் நம்முடைய குடும்பத்திற்கு..”

“புரிந்தது, புரிந்தது” என்று கூச்சலிட்டேன். என்மீது, இந்தச் சிறு பையனின்மீது என் தாய்க்கு எவ்வளவு நம்பிக்கை! அந்த நம்பிக்கையைச் சிதறடிக்கக் கூடாது என்ற முழு நோக்கமுடன் படிப்பில் முன்னைவிட அதிகம் அக்கறை செலுத்தத் தொடங்கினேன்.

ஆனால்—

என் தாயும் ஒரு நாள் இவ்வுலகை விட்டு மறைந்துவிட்டாள். அன்று முதல் இதுபோன்று தனிமரமாக, பட்ட மரமாக நான் நிற்கிறேன். என் வாழ்வின் இருண்ட பகுதியை ஒளியிட்டு நிரப்ப அந்தத் தெய்வம்தான் அருள் புரியவேண்டும்.

நல்ல தம்பி கதையைச் சொல்லி முடித்தான்.

‘பாவம்’ என்றது என் உள்மனம். அந்தச் சிறுவனைக் கூர்ந்து நோக்கினேன். அழகான மேனி; தேர்ந்த பார்வை; பசி மயக்கம் போலிருக்கிறது; தள்ளாடினான்.

“தம்பி!” என அழைத்தேன். என்னை நிமிர்ந்து நோக்கினான். “என்னுடன் வா” என்று கூறி விட்டு முன்னே நடந்தேன். நடுக்கடலில் தவிப்பவனுக்கு மரக்கலம் ஒன்று கிடைத்தாற்போன்ற உணர்வு..அந்தச் சிறுவனின் நடையிலே இப்போது ஒருவிதப் புதுத் தெம்பு பிறந்திருந்ததை என்னால் ஊகிக்க முடிந்தது.

வீடு வந்ததும் அவனைக் குளிர்ந்த நீரில் குளிக்கச் செய்தேன். என் ஏழு வயதுப் பையனின் உடைகளில் ஒன்றைக் கொடுத்து உடுத்துக்கொள்ளச் செய்தேன்.

பணக்கார வீட்டுப் பிள்ளைபோல் இப்போது அவன் காட்சியளித்தான்!

அன்று என் வீட்டிலேயே அவனுக்கு விருந்து! சாப்பிட்டு எவ்வளவு நாட்கள் ஆகியிருக்குமோ, ருசித்துச் சாப்பிடவில்லை. அள்ளி அள்ளிப் போட்டுக்கொண்டான்.

பின்னால் ஒரு முக்கியமான திருப்பம் ஏற்படப் போகிறதென்று அந்தச் சிறுவனுக்கு எப்படித்



தெரியும்? எனக்குத்தான் தெரியுமா?

உணவு உட்கொண்டவுடன் அந்தச் சிறுவன் என்னிடம் போய் வருவதாகச் சொல்லி விடை பெற்றுக்கொண்டு எழுந்தான். அவனைப் பிடித்திழுத்து உட்காரவைத்தேன்.

"ஏன், உனக்கு என்றும் இது போலவே தெருவில் சுற்றித் திரிய வேண்டும் என்ற விருப்பமா?" என்று சற்றுக் கடுமையாகவே கேட்டேன்.

பையன், பாவம், நிலை தடுமாறி விழித்தான். எனக்குச் சிரிப்புத் தான் வந்தது.

"தம்பி, நீ என்றும் என்னுடனேயே இருக்கலாம். உன் பேச்சும் குறுகுறுப்பும் என்னைக் கவர்ந்து விட்டன. நீ முன்னுக்கு வருவாய் என்ற நல்ல அபிப்பிராயத்தின் பேரில்தான் உன்னை என்னுடன் அழைத்து வந்தேன். ஆகவே போக வேண்டும் என்று துடிக்காதே; கொழு கொம்பு ஒன்று கிடைத்ததே என்று பெருமைப் படு" என்றேன்.

அவன் சாதித்த மௌனம் சம்மதத்தின் குரலைத் தோற்றுவித்தது.

எங்களுக்கு அவனை மிகவும் பிடித்துவிட்டது. தினமும் அவனை அழைத்து அன்போடு பாடம் சொல்லித் தருவாள் என் மனைவி. 'அத்திப் பழம் சொத்தை', 'ஆட்டின் வால் குட்டை' என்று மடமடவென ஒப்பிக்கத் தொடங்குவான். சொல்வது அவ்வளவும் மனப்பாடம். ஞாபக சக்தியோடு புரிந்துகொள்ளும் சக்தியும் அவனிடம் பிரமிக்கும்படி இருக்கத் தான் செய்தது.

அவனை அழைக்க வேண்டும் என்றில்லை. தானாகவே புத்தகங்களுடன் வந்து உட்காருவான். "பாடம் சொல்லித் தருகிறீர்களா?" என்று குழைவுடன் அவன் கேட்கும்போது எவர் மனதும் அவன்பால் இரக்கம் கொள்ளத் தான் செய்யும்.

பழக்கம் முற்றியது. அவன் இப்போது எங்களுடன் சகஜமாகப் பேச ஆரம்பித்தான்.

"அப்பா..!"

ஆம்; அவன் அப்படித்தான்

என்னை அழைத்தான். அந்த மூன்றெழுத்துச் சொல்லைச் சொல்வதற்குத்தான் அவன் முன்பெல்லாம் எவ்வளவு கூச்சப்படுவான், தெரியுமா? விவரம் தெரிந்த பிள்ளை இல்லையா!

அன்று என் மனைவியைக் கேட்டான்: "ஏனம்மா, தினமும் எங்கள் துணிகளையெல்லாம் நீயே துவைத்துப் போடுகின்றாயே; சமையல் வேலையோடு அதையும் செய்து வருவது உனக்குக் கஷ்டமாகத் தோன்றவில்லையா?"

அவளுக்கு அவன் உள் மனம் தெரிந்தது. கள்ளங் கபடற்றவன். புத்திசாலி என்பதை இப்படி அடிக்கடித் தன் பேச்சுக்களினாலும், செயல்களினாலும் வெளிப்படுத்தி வந்தான்.

அவன் கேட்டது உண்மைதான்.

அவன் வருவதற்கு இரண்டு நாட்கள் முன்பு வரை எங்கள் வீட்டில் பணி செய்து வந்தான் பரமசிவம். அவன் ஏதோ ஒழுங்காகத்தான் செய்து வந்தான்.

ஒரு நாள் அவனைக் காணவில்லை. என்ன காரணம் என்று தெரியவில்லை. அவன் குடிசைக்குச் சென்று பார்த்தபோது வெறிச் சென்று கிடந்தது அது. சொல்லாமல் கொள்ளாமல் எங்கே போனான் என்ற கேள்வியுடன் வீடு திரும்பினேன். என் மனைவிக்கும் கோபம் தான். "போகட்டும், இவர்களே இப்படித்தான். இருப்பார்கள், போவார்கள். இனி நமக்கு அந்தத் தொல்லையே வேண்டாம்" என்று அந்த வேலையையும் தான் இழுத்துப் போட்டுக்கொண்டாள்.

"தம்பி, ஏன் அழுகிறாய்?"

அன்று அவனை முதன் முதலில் நடுத்தெருவில் கேட்ட கேள்வியை இன்றும் கேட்க வேண்டி வந்தது. கதவு மூலையில் நின்று விசித்தபடி இருந்தான் அவன்.

"ஏன் தம்பி, அழுகிறாய்?" என்று மீண்டும் கேட்டேன்.

"அப்பா, சென்ற வருடம் இதே போல் பொங்கலுக்குச் சில நாட்கள் இருக்கும் போதுதான் என் அம்மா இறந்து போனாள். அது நினைவுக்கு வந்தது" என்று சொல்லி விட்டு மேலும் தேவித் தேவி அழ ஆரம்பித்துவிட்டான்.

என் கண்களில் நீர் துளித்தது. 'இளம் உள்ளம் இவ்வளவு வேதனைப்பட வேண்டுமா?' என்ற ஓர் அநுதாபம். அவனைப் பரிவுடன் அணைத்துக்கொண்டேன். "தம்பி. உனக்குத்தான் இப்போது ஓர் அப்பாவும், அம்மாவும் கிடைத்து விட்டார்களே...அதை மனத்தில் வைத்தாவது நீ அந்தப் பழைய நிகழ்ச்சியை மறந்து விடக் கூடாதா?" என்று அன்பொழுகக் கேட்டேன். அவன் என் மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டான்.

விடிந்தால் பொங்கல். நல்ல தம்பிக்குப் புதுத் துணிகள் வாங்கி அளித்தேன். பெருமை தாளவில்லை அவனுக்கு. ஆனாலும் சற்றைக்கொருதரம் இறந்து போன அன்னையின் நினைவு அவன் மனத்திலே தோன்றி, கண்களில் நீர்ப் பெருக்கெடுக்கும். மாளாத வேதனை!

மாலை மணி ஆறு இருக்கும்.

வாயிற் திண்ணையில் அமர்ந்து தெருவை நோக்கியபடி இருந்தேன். நல்ல தம்பி என் பக்கத்தில் அமர்ந்து ஏதோ எழுதிக் கொண்டிருந்தான். சாப்பிடும் நேரம், தூங்கும் நேரம் இவை தவிர மற்றப் போதெல்லாம் படிப்புத்தான். சதா படிப்பு.. படிப்பு..படிப்பு..!

அப்பொழுது—

"ஐயா" என்று கதறிக் கொண்டே நெடுஞ்சாண்கிடையாக என் காலில் விழுந்தது ஓர் உருவம். பார்த்தேன்! வேறு யாருமில்லை; பரமசிவம்தான்!

"எதற்காக அவன் இப்படி நடந்து கொள்ள வேண்டும்? காலில் விழுமளவுக்கு அவன் என்ன குற்றம் செய்து விட்டான்?' என்று கேள்விமேல் கேள்வியாக என்னையே கேட்டுக் கொண்டேன்.

அவனே கூறினான்: "கூடப் பிறந்த குணம்: மாற்றிக் கொள்ளலாம் என்ற மனத் துணிவோடுதான் இருந்தேன். ஆனாலும் பழைய குணம் மீண்டும் தலையெடுத்து விட்டது. எட்டு மாதச்

சிறைத் தண்டனை விதித்து விட்டார்கள்...''

''சிறைத் தண்டனையா? அப்படியானால் நீ ஒரு....''

''இல்லை..நேற்றுவரைத் திருட்டுக் குணம் படைத்தவனாகத்தான் இருந்தேன். இன்று..''

நல்லதம்பியின் மீது அவன் பார்வை பதிந்தது.

அவனையே இமை கொட்டாது பார்த்தான். உடல் அசையவில்லை. உயர்ந்த புருவம் தாழ மறுத்தது. கட்டை கணக்காக நின்றுகொண்டிருந்தவன், ''தம்பி, நீயா?'' என்ற ஆவலுடன் அவனைத் தாவி அணைத்துக்கொண்டான்.

''எசமான், இவன்தான் என் மகன். பெயர் நல்லதம்பி. இவனையும் இவனைப் பெற்றவளையும் கைவிட்டுப் போனேன். கடவுள் என்னைத் தண்டித்துவிட்டார். என் கண்கள் இன்றுதான் திறந்தன. எசமான்..'' அவனால் பேசவே முடியவில்லை. நானும் மௌனம் சாதித்தேன்.

பரமசிவம் நல்லதம்பியின் தந்தையா?


அப்போது அந்தச் சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்ள என் மனம் ஒப்பவில்லை.


அன்று இரவு.

மாடியில் திறந்த வெளிப் பகுதியில் நானும் நல்லதம்பியும் அமர்ந்திருந்தோம். மெதுவாக என் சந்தேகத்தை நெளிய விட்டேன்.

''தம்பி, முதன் முதலாக அன்று உன்னைச் சந்தித்தபோது எனக்குத் தந்தை கிடையாது என்றாயே! பரமசிவம் உன் தந்தைதானா?''

''அப்பா. அதில் யாதொருவித மான சந்தேகமும் இல்லை. என் தந்தை முதன் முதலாக மூன்று மாத காலம் சிறைத் தண்டனை பெற்றாராம். அப்போதே என் தாய் என்னிடம் சொல்லியிருக்கிறாள், 'தம் குடும்பம் மதிப்பிழந்து போய்விட்டது' என்று. அதை நான் என் குறுகிய அநுபவத்திலேயே கண்டேன். என் தாய் இறந்த பிறகு அநாதையாக, ஆதரிப்பவர்கள் அற்றவனாக நான் அலைந்து திரிந்தபோது பல பேரிடம் என் நிலையைக் கூறி அழுதிருக்கிறேன். எனக்கு அநுதாபம் காட்டியவர்கள் என் குடும்ப வரலாற்றைக்





[பையன் தனக்குப் பரீட்சையிலே 40-க்கு 2 மார்க்கு வாங்கியிருக்கிறான்.]

**தகப்பனார்:** நூற்றுக்கு எத்தனைடா ஆகிறது?

**பையன்:** நூற்றுக்கு ஆறு மார்க்கு அப்பா!

**தகப்பனார்:** அப்படியானால் உனக்கு இரண்டு மார்க்கு கிடைத்ததே, அதுவே அதிசயம் தான்! —பி. கே. சாமி.

கேட்டபோது பாம்பெனச் சீறி விழுந்தார்கள். 'அந்தத் திருட்டுப் பயலுக்கு மகனைப் பிறந்த இவன் மட்டும் என்ன வாழ்ந்து விடப் போகிறான்?' என்று ஏசினார்கள். அப்போதுதான் எனக்குப் புத்தி வந்தது.

என் கண்கள் வியப்பின் மிகுதியால் விரிந்தன: 'அறிவாளி எங்கிருந்தெல்லாம் தோன்றுகிறான்!' என்ற அபூர்வ ஆராய்ச்சியில் இறங்கினேன் நான்.

அன்று பொங்கல்.

புத்தாடை தரித்து, புன்னகை தவழ, அப் புதுப் பெரும் நாளைப் பெருமையுடன் கொண்டாடினான் நல்லதம்பி. பக்கத்திலே நின்று பரவசம் பொங்கப் பார்த்தான் பரமசிவம்.

எங்கள் கடமை தீர்ந்துவிட்டதாகக் கருதினோம். இனி அவனை ஆளாக்கித் தக்க சிறப்போடு வெளியுலகில் நடமாடச் செய்யத்தான் பரமசிவம் வந்துவிட்டானே!

"பரமசிவம், அவனை மேலும் உயர்த்துவது உன் பொறுப்பு" என்றேன் வேடிக்கையாக.

மாலை மூன்று மணியிருக்கும்.

பரமசிவம் பரபரப்போடு வந்தான். "எசமான் என் மகன் கொடுத்தான்னு சொல்லி யாரோ கொண்டுவந்து தந்தாங்க.." என்று கூறியவாறே என் கையில் ஒரு கடிதத்தைக் கொடுத்தான்.

கடிதத்தைப் பிரித்துப் படித்தேன். தலை சுற்றியது, நினைத்தது வேறு; நடந்தது வேறாகிவிட்டது.

அந்தக் கடிதத்தில் கண்டிருந்தது.


"அப்பாவுக்கு,

நல்லதம்பி வணக்கமுடன் எழுதுகிறேன். இவ்வளவு காலம் உங்கள் அன்பான அரவணைப்பில் இருந்துவிட்டு இன்று பிரிந்து செல்கிறோமே என்று வருந்துகிறேன். இருந்தாலும் இயற்கையின் மீது தான் குற்றத்தைச் சுமத்த வேண்டியிருக்கிறது. 'தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்' என்று நான் படித்திருக்கிறேன். என் அன்னையும் அதைப் பன்முறை எனக்கு எடுத்துக் காட்டியிருக்கிறாள். அன்னையின் சொல் ஒவ்வொன்றும் அமிர்தமென நான் அவ்வப்போது நடந்துவந்த நிகழ்ச்சிகளைக் கொண்டு உணர்ந்திருக்கிறேன்.

"நேற்று என்னையும், என் தந்தையையும் சேர்த்து வைத்தீர்கள். ஆனால் அவரது பழக்கம் அடியோடு விட்டுப் போகும் என்பது என்ன உறுதி? என்னையும் அவர் தன் தொழிலுக்குப் பயன்படுத்திக் கொண்டால்கூட ஆச்சரியப்படுவதற்கில்லை.

நீங்கள் என்னைத் தகுந்த முறையில் ஆளாக்கிவிட்டிருக்கிறீர்கள். அது போதும் எனக்கு. இனி இறைவனின் இன்னருள் எனக்குக் கிடைக்காமல் போகாது. இதே மனத் துணிவோடுதான் இந்தச் சூழ்நிலையை விட்டு நீங்குகிறேன்.

"தங்களை என்றும் என் வாழ்வில் மறக்க மாட்டேன். தாங்கள் என் தெய்வம். நல்லதம்பி."




# வேடிக்கைப் புதிர்கள்



(1) இரண்டு குச்சிகளில் நெருப்பு உண்டாக்கச் சிறந்த வழி எது?

(2) எதில் கண்ணை எடுத்து விட்டால் மணி மட்டும் மிஞ்சும்?




(3) ஓர் எழுத்துப் போனால் எழுது என்று தூண்டும்; வேறு ஒன்று போனால் ஏமாற்று என்று பொருள் கொடுக்கும். இரண்டும் போனால் எது என்று கேட்கும். அந்த வார்த்தை எது?

(4) சீப்பைக் கண்டால் முகத்தைச் சுளித்துக் கொள்பவன் யார்?

(5) என்னிடத்தில் பெரிய நகரங்கள் உண்டு; வீடுகளே கிடையாது. மலைகள் உண்டு; கற்கள் கிடையாது. காடுகள் உண்டு; மரங்கள் கிடையாது. நான் யார் தெரியுமா?



(6) முட்டாள் வழுக்கைப் பென்சிலைப் போல. ஏன்?



(7) எந்தச் சக்கரம் கால் இல்லாமல், தரையைத் தொடாமல் உருளுகிறது?

(8) புகை உண்டாகும் நாலு எழுத்து வார்த்தை எது?



(9) இரண்டு அங்குல இடைவெளியில் இருந்தாலும் உன்னைத் தொட முடியாமல் இருக்க என்ன செய்யவேண்டும்?

(விடை - 3-ஆவது அட்டையில்)



# அரச நீதி

'இளம்பாரி'

மணிப்புரி ராஜ்யத்தை ஆண்டு வந்த ராஜாவுக்கு நெடு நாளாகப் புத்திர சந்தானம் இல்லாதிருந்து கடைசியாக ஆண்டவன் அருளால் இரண்டு பிள்ளைகள் பிறந்தன. அவர்கள் வளரத் தொடங்கிய நாளையில், ஒரே ரத்தத்தில் பிறந்த இரண்டு பிள்ளைகள் என்பதைத் தவிர குணத்தைப் பொருத்த வரையில் மிகவும் மாறுபட்டு விளங்கினுர்கள். சுருக்கமாகச் சொல்லப் போனுல், இளையவன் அன்பே உருவாக விளங்கினுன் என்றும் மூத்தவன் அவனுக்கு நேர் மாருக இருந்தான் என்றும் ஒரே வரியில் முடித்து விடலாம்.

காலச் சக்கரத்தின் சுழற்சியிலே இருவரும் வளர்ந்து வாலிபர்கள் ஆனுர்கள். இப்பொழுது மன்னருக்கு ஒரு பிரச்னை தீராத தொல்லையாக இருந்து வந்தது. அந்தப் பிரச்னை இருவரில் யாருக்கு இளவரசுப் பட்டம் சூட்டுவது என்பது தான். நியாயப் படியும், பரம்பரை வழக்கப் படியும் மூத்தவனுக்குத் தான் பட்டம் சூட்டவேண்டும். ஆனுல், அவனுக்குப் பட்டம் சூட்டினுல், நாட்டு மக்கள் வேடன் கையில் சிக்கிய பருந்தாகத் துயரத்தால் துடிதுடித்து அழிந்து போக வேண்டியதுதான். அப்படி இன்றி, இளையவனுக்குப் பட்டம் சூட்டுவதென்ருலோ நியாயமும், பரம்பரை வழக்கமும், சாஸ்திரங்களும் இடங் கொடுக்காது. இந்த நிலையில், என்ன செய்வது என்று மண்டையைப் போட்டுக் குழப்பிக் கொண்டிருந்த அரசர் கடைசியில் அதற்கு ஒரு முடிவும் கட்டி விட்டார். உடனடியாக மந்திரியை அழைத்து வருமாறு காவல்காரனுக்குக் கட்டளையிட்டார். மந்திரி வந்தார்.

''வருகிற புதனன்று காலை இளையவனுக்குப் பட்டம் சூட்டுவதற்கான ஆயத்தங்களைச் செய்!'' என்று கட்டளையிட்டார்.

மந்திரிக்கு ஒரே திகைப்பாய் இருந்தது. என்ருலும், அரசர் பேச்சுக்கு மறுபேச்சுப் பேச முடியுமா? கட்டளையை நிறைவேற்றினுர்.

* * *

மூத்தவனுக்கு ரத்தம் கொதித்தது. வயதில் மூத்தவனுக அவனிருக்கையில் அவனைவிட வயதில் சிறியவனுன இளையவனுக்குப் பட்டம் சூட்டுவது எவ்வாறு பொருந்தும் என்று உள்ளம் குமுறியது. நீண்ட நேர ஆலோசனைக்குப் பிறகு ஒரு முடிவுக்கு வந்தவனுக, அரண்மனையை விட்டு வெளியேறி காடு மலையெல்லாம் தாண்டி அடுத்த நாடான குபேரபுரியை வந்தடைந்தான்.

குபேரபுரிக்கும் மணிப்புரிக்கும் பரம்பரை பரம்பரையாகத் தீராத பகை இருந்து வந்தது. மணிப்புரி நாட்டை எவ்விதத்திலாவது வென்று புகழடைவதோடு—தன்னுடைய நெடு நாளைய

21805.



வஞ்சத்தையும் தீர்த்துக் கொள்ளும் சந்தர்ப்பம் ஒன்று கிடைக்காதா என்று எதிர்பார்த்துத் தவம் கிடந்தான் குபேரபுரி அரசன்.

அரண்மனையை விட்டு வெளியேறிய மூத்தவன் குபேர புரியரசனை வந்தடைந்தான். அவனிடம் தனியாக நெடுநேரம் பேசிக் கொண்டிருந்தான். தன்னுடைய தந்தை, மூத்தவனாகத் தானிருக்கையில் இளையவனுக்கு இளவரசுப் பட்டம் சூட்டியதைச் சொன்னான். மணிப்புரி நாட்டின் அரசியல் ரகசியங்கள் அனைத்தையும் வெளியிட்டான். எவ்விதத்திலாவது மணிப்புரி நாட்டை குபேரபுரியரசன் ஜயித்து தன்னையே அந்த நாட்டின் அரசனாக முடிசூடிவைக்க வேண்டுமென்று வேண்டிக் கொண்டான். கடைசியாக, தான் குபேரபுரிக்கு அடங்கிய சிற்றரசனாக மணிப்புரியை ஆண்டுவருவதாகப் ஒத்துக்கொண்டான்.

இவ்வளவையும் பொறுமையாகக் கேட்டுக்கொண்டிருந்த குபேரபுரி அரசன் மகிழ்ச்சி அடைந்தவனாக, அவனுடைய கருத்திற்கு ஒப்புதல் அளித்தான்.

பின்னர், மணிப்புரியின் ரகசியங்கள் அனைத்தும் தெரிந்து விட்டதால் எளிதிலேயே அந்த நாட்டை வென்றுவிடலாம் என்ற நினைப்புடன் படை திரட்டத் தொடங்கினான்.

* * *

**ரா**ஜாங்கத்தின் பிரதான ஒற்றன் சொன்ன செய்தியைக் கேட்டதும் திகைத்து விட்டார் மணிப்புரி மந்திரி. அந்தச் செய்தியை அரசரிடம் தெரிவிக்க அவசர அவசரமாக ஓடினார் அவர். விஷயத்தையெல்லாம் பொறுமையாகக் கேட்டுக் கொண்ட மன்னர், சிறிது நேரம் யோசனையில் ஆழ்ந்தார். பின்னர், மந்திரியைப் பார்த்துக் கேட்டார்:

''அமைச்சரே! என்ன செய்யலாம் என்று எண்ணுகிறீர்கள்?''

''அரசே! அதிகச் சங்கடமான நிலையில் இருக்கிறோம் நாம். நம்முடைய ரகசியங்கள் அனைத்தையும் எதிரிகள் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். இந்த நேரத்தில் அவர்களோடு சண்டையிட்டு, பல உயிர்களை வீணகப் பறிகொடுப்பதைக் காட்டிலும் சமாதானம் செய்து கொள்வதே மேல் என்பது என்னுடைய தாழ்மையான கருத்து!'' என்று தன்னுடைய கருத்தை வெளியிட்டார் மந்திரி.

''அதைக் காட்டிலும் சிறந்ததொரு திட்டம் போட்டுள்ளேன், மந்திரி!'' என்று கூறிவிட்டு, விறுவிறு என்று ஒரு கடிதத்தை எழுதிக் கையெழுத்தும் இட்டு, அரசாங்க முத்திரையையும் போட்டார் அரசர். பிறகு, ''இதைப் படித்துப் பாரும்!'' என்று அதை மந்திரியிடம் கொடுத்தார்.

அதைப் படித்து முடித்ததும் மந்திரிக்கு மூச்சே நின்று விடும் போலிருந்தது. ''அரசே இந்தக் கடிதம் எதிரிகள் கையில் கிடைத்



பையன்: ஸார், நீங்கள் கொடுத்த கூட்டலைப் பத்துத் தடவை கூட்டியிருக்கேன்.

உபாத்தியாயர்: பேஷ்! அப்படி ஒரு தடவைக்குப் பத்துத் தடவை கூட்டிப் போடுவதுதான் நல்லது.

பையன்: ஆனல் பாருங்கள், ஸார்! ஒவ்வொரு தடவையும் ஒவ்வொரு விடை வந்திருக்கு!

தால் மூத்தவருடைய உயிரே அல்லவா போய்விடும்!'' என்று திகைப்புடன் கூறினர் அவர்.

''அமைச்சரே! எனக்கு என்னுடைய மகனைவிட என்னுடைய மக்கள்தான் முக்கியம்! எதிரிகள் கையில் — அதிலும் எதிரிகளின் அரசன் கையிலேயே— இந்தக் கடிதம் கிடைக்க வேண்டும். அப்பொழுதுதான் என்னுடைய திட்டம் நிறைவேறும். அரச நீதியும் காப்பாற்றப்படும்'' என்று கூறிய அரசர், ''நீர் போய் திறமைசாலியான ஓர் ஒற்றனை அழைத்து வாரும்'' என்று கட்டளை யிட்டார். மந்திரி அவ்வாறே ஓர் ஒற்றனை அழைத்து வந்தார். மந்திரி அவனிடம் தன்னுடைய திட்டத்தைக் கீழ்க்கண்ட வாறு விளக்கிச் சொன்னர்:

''இங்கிருந்து குபேரபுரிப் பட்டணத்திற்குப் போ! நாட்டுப் புறத்தான் போல வேஷமிட்டுச் செல்! அந்த நாட்டு அரசர் கொலுவை அடைந்ததும் நான் சொல்கிறபடி திறமையாக நடித்து இந்தக் கடிதத்தை அவர் கையில் எப்படியாவது சிக்க வைத்து விடு!'' என்று சொல்லி அவன் காதில் என்னவோ ரகசியமாகச் சொன்னர் அரசர்.

தூதன் தன்னுடைய குதிரையில் ஏறிக்கொண்டு குபேரபுரியை நோக்கிப் பறந்தான்.

* * *

குபேரபுரி அரசசபையில் தன்னுடைய போர்த் திட்டத்தைப் பற்றித் தன்னுடைய பிரதானி



களுக்கு விளக்கிக்கொண்டிருந்தான் அந்த நாட்டு அரசன். அப்பொழுது.—



போர்வீரர்கள் சிலர் ஒரு பட்டிக்காட்டானைக் கட்டிப் பிடித்து வந்து கொலுமுன்னர் நிறுத்தினார்கள். அரசன் அந்தப் பட்டிக்காட்டான் என்ன தவறு செய்தான் என்று கேட்பதுபோல் காவற்காரர்களைப் பார்த்தான். அவர்களைப் பதில் கூற விடாது தானே பேச ஆரம்பித்தான் அந்தப் பட்டிக்காட்டான்.

''அரசே; நான் ஓர் விவசாயி! என்னுடைய நிலங்கள் மணிப்புரி ராஜ்யத்திற்கும், குபேரபுரி ராஜ்யத்திற்கும் நடுவில் இருக்கின்றன. அந்த இடத்தில் நான் நேற்று வயல் வேலையாகக் கவனித்துக் கொண்டிருந்த பொழுது வடக்கே மணிப்புரியி லிருந்து ஒரு குதிரை வீரன் வெகு வேகமாக இந்த ஊரை நோக்கி வந்துகொண்டிருந்தான். அப்படி அவன் வெகு வேகமாகச் செல்கையில் இந்தக் கடிதம் அடங்கிய சுருளொன்றைத் தவறவிட்டு விட்டுச் சென்று விட்டான். நான் அந்தக் கடிதத்தை எடுத்துப் பார்த்தேன். ஆனால், அது ஏதோ அரசாங்க விஷயமாக இருக்கவே நான் படிக்கக்கூடவில்லை. நேராகத் தங்களிடம் காண்பிக்கலாம் என்று கொண்டு வந்தேன். ஆனால், தாங்கள் ஏதோ ரகசிய ஆலோசனையில் இருப்பதாகவும் தங்களை யாரும் பார்க்கக்கூடாது என்றும் காவல்காரர்கள் தடுத்தார்கள். அவர்களை மீறி உள்ளே வர முயற்சித்த பொழுது அவர்கள் என்னைப் பிடித்துத் தங்கள் முன் கொண்டு வந்து நிறுத்தினார்கள்!'' என்று கூறி முடித்தான் அந்தப் பட்டிக்காட்டான்.

அரசர் அந்தக் கடிதத்தை வாங்கிப் படித்தார். அதைப் படித்து முடித்ததும், அவருடைய மீசைகள் துடித்தன. ஒரே கோபம் மிகுத்தவராக அதை மந்திரியிடம் கொடுத்துச் சபையில் உள்ளவர்களுக்கு வாசித்துக் காட்டச் சொன்னார். மந்திரி படித்தார்:



லக்ஷ்மி: ஏண்டி கமலா, நீ இப்பொழுது பாட்டு கற்றுக்கொள்கிருய்போல இருக்கே?

கமலா: ஆமாம், உனக்கு எப்படித் தெரியும்?

லக்ஷ்மி: இரண்டு நாளாக உன் வீட்டு வாசலில் இரண்டு கழுதைகள் நின்றிருப்பதைப் பார்த்ததிலிருந்து தெரிந்துகொண்டேன்.

---

"மணிப்புரி

அன்புள்ள குமாரனுக்கு,

ஆண்டவன் அருளால் எல்லா நலங்களும் உண்டாகுக! நீ சென்ற காரியம் நல்ல முறையில் நடந்தேறும் என்று பெரிதும் நம்புகிறேன். நம்முடைய நாட்டைப் பற்றிய ரகசியங்கள் என்று அவர்கள் சற்றும் சந்தேகம் கொள்ளாத வகையில் தப்பு வழியைக் கூறி முதலிலேயே அவர்களுக்குத் தோல்விக்கு வழி வகுத்துக் கொடுத்திருப்பாய். அத்துடன் அந்த நாட்டின் ராஜாங்க ரகசியங்கள் அனைத்தையும் நன்ருகத் தெரிந்துகொண்டு இங்கே வந்து சேர்.

ஆசிகள்.

உன் அன்புள்ள தந்தை,

.............."

மணிப்புரி அரசன்.

என்று முடிக்கப்பட்டு அரசாங்க முத்திரையும் இடப்பட்டு இருந்தது அந்தக் கடிதம்.


இதைப் படித்ததும் ஆத்திரம் மிகுந்தவனுக குபேரபுரி அரசன் மணிப்புரியின் மூத்த இளவரசனைத் தூக்கிலிட்டுவிட்டார். அத்துடன் இந்தச் சமயத்தில் மணிப்புரிமீது படையெடுப்பு நிச்சயமாகத் தோல்வியுறும் என்று கருதியவனுக, படையெடுப்பையும் ஒத்திப் போட்டார்.

அரசன் அத்துடன், உண்மையைத் தெரிவித்து தன்னுடைய நாட்டைப் பேராபத்திலிருந்து காப்பாற்றிய அந்தப் பட்டிக் காட்டானுக்கும் நிறையப் பரிசுகள் வழங்கி அனுப்பினுன்.

மூத்தவன் தூக்கிலிடப்பட்ட மறுநாள் மணிப்புரி அரசர் தன்னுடைய மந்திரியைப் பார்த்துப் பின்வருமாறு சொல்லிக்கொண்டிருந்தார்.

"எனக்கு, என்னுடைய மகனின் சுகத்தைவிட அரசநீதிதான் முக்கியம். ஆகவேதான் மூத்தவனுக்குப் பட்டம் சூட்டாது, இளையவனுக்குப் பட்டம் சூட்டினேன். அத்துடன் மூத்தவன் இந்த நாட்டு மக்களின் சுபிட்சத்திற்கே உலை வைக்கும் வகையில் எதிரி நாட்டானுடன் சேர்ந்துகொண்டு துரோகம் செய்கிருன் என்று தெரிந்தவுடன் அவனையே ஒழித்துவிடும் வகையில் இந்தப் போலி நாடகத்தைத் தயாரித்தேன். நாடகம் எந்தவித விக்கினமும் இன்றி நல்ல முறையில் நடந்தேறியது. இந்த நாட்டு மக்களின் வாழ்வு காப்பாற்றப்பட்டது, இந்த நாட்டைக் காட்டிக்கொடுக்க முயற்சித்த ஒரு துரோகி ஒழிந்தானென்று நான் மகிழ்கிறேன். ஆனுல், அதே சமயத்தில் என்னுடைய கடைசி காலத்தில் எனக்கு ஆண்டவன் அளித்த இரண்டு செல்வங்களில் ஒன்று போய்விட்டதே என்று வருந்துகிறேன். அரச நீதியைக் காப்பாற்ற எந்தவிதத் தியாகத்தையும் செய்யத் தயாராக இருக்க வேண்டும் என்று இதில் இருந்தாவது தெரிந்து கொள்!" என்று கூறி முடித்த அரசனின் கண்களிலிருந்து இரண்டு துளிக் கண்ணீர் உருண்டோடியது.

# சைனா சுசூ




ஆர்வி

இங்கிங் மிகவும் மிடுக்காகத்தான் கேட்டான். அவன் கேட்டதைப் பார்த்தாலே சீனனுக்கு வேறு ஒரு சந்தேகம் தட்டியது. ஒருகால் இந்த வேலைக்காரனே வேறு ஒருவனோடு சேர்ந்து பாரிஸ்டரைத் தீர்த்துக் கட்டச் சதி செய்திருப்பானோ என்று தோன்றியது.

ஆனால் அந்த வேலையாள் சீனனிடம் பயந்தது மாதிரி இப்போது அந்தக் கிங்கிங்கிடம் பயப்படவில்லை. சீனன் கையில் துப்பாக்கி இருக்கும் தைரியமோ, அல்லது தான் குற்றவாளி இல்லை என்கிற தைரியமோ, தெரியவில்லை.

''எந்தக் கூட்டாளியைக் கேக்கிறே, ஐயா?'' என்றான் அவன், கிங்கிங்கைப் பார்த்து. இருவருக்கும் ஒரு பாக தூரம் இடைவெளி இருந்தது.

''தெரியல்லியா உனக்கு? பாலிலே மயக்க மருந்து போட்டுவிட்டுப் போனானே, அவன்தான்!''

''அவன் எனக்கா கூட்டாளி?''

''பின்னே யாருக்கு? உங்க பாட்டனுக்கா?''

''டேய், மூடுடா வாயை! வீட்டுக்குள்ளே கேட்டுக் கேள்வியில்லாமெ நுழைஞ்சானும். எப்படி உள்ளே வந்தேன்னு கேட்டா, என்னையே திருப்பிக் கேள்வி கேட்கிறாயா? எப்படியிருக்கு உடம்பு உனக்கு? பாலிலே மயக்கப்பொடி கலந்தவன் என் கூட்டாளியா, உன் கூட்டாளியா? ஊரான் வீட்டிலே உத்தரவு இல்லாமல் நுழைஞ்சதும் இல்லாமெ தைரியமா எதிர்த்து வேறே பேசறியா?''

கிங்கங் அவன் வார்த்தைகளைக் காதில் வாங்கிக் கொண்டதாகவே தெரியவில்லை. வீட்டின் சொந்தக்காரன் போல, பாரிஸ்டர் உட்காரும் நாற்காலியில் போய் ஜம்மென்று உட்கார்ந்து கொண்டான். டிராயரைத் திறந்தான்; மூடினான். மேஜைமேலிருந்த வழக்குக் கட்டுகளைத் தூக்கிப் பார்த்தான்; மறுபடியும் வைத்தான். இவ்வளவுக்ும் நடுவிலே அந்த வேலையாள்மீது ஒரு கண்ணும் வைத்திருந்தான். அவனுடைய நோக்கம் இன்னதென்று புரியவில்லை.

சீனனுடைய மூளை பரபரவென்று வேலை செய்தது. அவனுக்குப் பின்னால் பாரிஸ்டர் மயக்க நிலையிலேயே கிடந்தார். இந்தச் சமயத்தில் சாமர்த்தியமாக நடந்து கொள்ளாமல் போனால் பெரிய விபரீதமே நேர்ந்துவிடக்கூடும். ஆகவே அவன் என்னதான் நடக்கிறதென்று கதவு மறைவில் சிறிது உட்கார்ந்து கவனித்துக் கொண்டிருந்தான். போலீசுக்குத் தகவல் கொடுப்போம் என்றால் டெலிபோன் கிங்கிங் உட்கார்ந்திருந்த மேஜைமீது இருந்தது. அவன் மெல்ல வெளியில் போய், ஷங்கங் மூலமாகத் தகவல் அனுப்பலாம் என்று எண்ணினான். ஆனால் கீழே இறங்கிப் போவதற்கும் முடியாமல் இருந்தது. அப்படிப் போவது என்றால் முன் அறை வழியாகத்தான்

போகவேண்டும். கிங்கிங் கண்ணில் படாமல் போகமுடியாது. என்ன செய்வது என்று அவன் யோசித்துக் கொண்டிருந்தபோது, ''எங்கேடா அந்தப் பயல்? உள்ளதைச் சொல் கிருயா, இல்லே உதை கிதை வாங் கப் போகிருயா?'' என்ருன் கிங்கிங்.

''எந்தப் பயல்?'' என்ருன் வேலேக்காரன்.

''எந்தப் பயலா?'' பாரிஸ்டரின் கைப்பிரம்பை எடுத்துக்கொண்டு எழுந்தான் கிங்கிங்.

இப்போது சீனனும் விருட் டென்று உஷாராக எழுந்து நின் ருன்.

''அந்தப் பயல் வாசலில் வண் டியை நிறுத்திவிட்டு உள்ளே வந்த தைப் பார்த்தேன். நான் இங்கே வரும்போது அவனுடன் நீ பேசிக் கொண்டிருந்த குரலும் கேட்டது. அவனே எங்கே ஒளித்து வைத்திருக் கிருய்? மரியாதையாகச் சொல்லி விடு. இல்லேயோ அடி வாங்கிச் சாகாதே!''

வேலேக்காரன் அவனே எதிர்த்து நிற்கத் தயாராக இருந்தான். கிங் கிங் படுக்கையறைப் பக்கம் அடி யெடுத்து வைக்கு முன்பாகக் குறுக்கே நின்று தடுத்தான். அவன் கையை விரித்துக் கொண்டு நிற்ப



பதைக் கண்டு கிங்கிங் பரிகாசமாகச் சிரித்தான். அடுத்த கணம் சுளீரென்று அவனுடைய கைமீது ஓங்கி ஓர் குத்து விழுந்தது.

"உஸ், அப்பாடா!" என்று கையைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்துவிட்டான். ஆனால் அதற்குள் சீனன் ஸ்பிரிங் துள்ளி எழுவது போல் எழுந்து, டிராயரிலிருந்த பைக்குள் கையைவிடப் போனான். கண் இமைக்கும் நேரத்துக்குள் கிங்கிங் சீனன்மீது பாய்ந்து, அவன் அசையமுடியாதபடி பிடித்துக் கொண்டுவிட்டான்.

"உன்னைத்தான் தேடினேன்.... முதலில் உனக்கு ஒரு வழி செய்து



விட்டுத்தான் மற்ற வேலைகளைக் கவனிக்க வேண்டும்" என்று சீனனைப் பின்கட்டாகக் கட்டி, கைக்குட்டையால் பிணைத்தான்.

சீனன் சத்தம் போட்டுக் கூவியிருக்கலாம். ஆனால் அவன் அப்படிச் செய்யவில்லை. செய்திருந்தாலும் பலன் கிடைத்திருக்குமா என்பது வேறு விஷயம். இதன் நடுவே கையில் அடிபட்ட வேலைக்காரன் அதை லட்சியம் செய்யாமல் கிங்கிங்மீது பாய்ந்தான்.

இதற்குள் மாடிப் படியினருகே மற்றொரு பெரிய உருவம், உடம்பெல்லாம் கறுப்புக் கம்பளி போர்த்த உருவம், தோன்றி, அவர்களைப் பார்த்து ஒரு கனைப்புக் கனைத்தது. சீனன் அதைப் பார்த்ததும் வெலவெலத்துவிட்டான்.

பாரிஸ்டர் படுத்த படுக்கையாகக் கிடந்தார். காடாந்தகாரமான தூக்கம்; அப்படி இப்படி அசையக்கூட இல்லை.

கறுப்புக் கம்பளி வந்ததும் கிங்கிங், "அவர்களை அந்த அறையில் தள்ளிவிட்டு நீ பார்த்துக்கொள். நான் அதற்குள் வந்த வேலையை முடித்துக் கொள்கிறேன்" என்றான்.

பாரிஸ்டருடைய அறையில் சீனனும் வேலைக்காரனும் நின்றார்கள். கதவைச் சாத்திவிட்டு வெளியில் கறுப்புக் கம்பளி நின்றான். சீனனுக்குப் பயத்திலும் மூளை தெளிவாக இருந்தது. அவன் உடனே வேலைக்காரனைப் பார்த்து, "டேய்! ஒரு கிளாஸில் தண்ணீர் எடு. பாரிஸ்டர் முகத்தில் தெளிப்போம்!" என்றான்.

வேலைக்காரன் சயன அறையை ஒட்டியிருந்த பாத் ரூமுக்குள் நுழைந்து ஒரு துணியில் தண்ணீரை நனைத்து வந்தான். சீனன் அதை வாங்கி அந்தப் பாரிஸ்டர் முகத்தில் துடைத்தபோது, இரண்டு கைகள் அவன் கையைப் பிடித்துக் கொண்டன. சீனன் வாயைவிட்டுக் கத்துவதற்கு இருந்தான். சட்டென்று பாரிஸ்டருடைய ஒரு கை அவன் வாயைப் பொத்தியது.

"சத்தம் போடாதே!" என்றார் பாரிஸ்டர் மெல்லிய குரலில்.

"நீங்கள்..மயக்கமாக..மயக்கம் தெளிந்துவிட்டதா?"

பாரிஸ்டர் தலையை ஆட்டினார். "பேசாமல் இரு. எனக்கு எல்லாம் தெரியும்" என்றார்.

"அப்போ மயக்கம் தெளிந்து விட்டதா?"

"இல்லை. மயக்கமே வரவில்லை."

"பாலில்...."

"நான் அந்தப் பாலைச் சாப்பிடவேயில்லை."

சீனனுக்குப் பேச்சே ஓடவில்லை. "அப்படியானால்... அப்படியானால்..." என்று பேசமுடியாமல் திணறினான்.

"அப்படியானால் என்ன? எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறேன். இதோ பார்த்தாயா?" என்று முதுகுக்குக் கீழே உடலைப் புரட்டிக் காட்டினார்.

ஒரு காகிதக் கட்டும், கைக்குழல் துப்பாக்கியும் இருந்தன.

"என்ன இது கட்டு!"

"கிழவர் உன் பேருக்கு எழுதிய உயில்! துப்பாக்கி என் தற்காப்புக்கு!"

"இவர்கள் வருவார்கள் என்று தெரியுமா?"

தெரியும் என்பதுபோல் பாரிஸ்டர் தலையை ஆட்டினார். சீனன் அவரையே வியப்போடு பார்த்தான். வேலைக்காரன் பயபக்தியோடு சற்று எட்டியே நின்றுகொண்டிருந்தான். அடுத்த அறையில் கிங்கிங் மேஜை, டிராயர் எல்லாவற்றையும் புரட்டிக்கொண்டிருந்த சத்தம் கேட்டது. கறுப்புக் கம்பளி என்ன செய்துகொண்டிருந்தானோ தெரியவில்லை.

பாரிஸ்டர் சைகையாலேயே பேசாமல் இருக்கும்படி சொல்லிவிட்டு மீண்டும் தூங்குவதுபோல் கண்களை மூடிக்கொண்டார். சீனனுக்கு ஒரு விதமாக உண்மை விளங்கி விட்டது. பாரிஸ்டரை ஏமாற்றி மயக்க மருந்தைக் கலந்து விட்டுச் சென்றவன்தான் உண்மையில் ஏமாந்து போனான். பாரிஸ்டர் பாலையும் குடிக்கவில்லை; ஏமாந்து போகவுமில்லை. அத்துடன் மட்டுமா? முன்யோசனையோடு தற்காப்பாகவும் இருந்து இருக்கிறார். சீனன் தைரியத்தோடு உட்கார்ந்திருந்தான். அதற்குமேல் என்ன நடக்கப்போகிறதோ, என்ன செய்ய வேண்டுமோ என்று அவனுக்குக் கிலியாக இருந்தது. கிங்கிங்கை அவன் இன்றுதான் இத்தனை அருகில் பார்த்திருக்கிறான். பூனைக் கண்ணும் புலிப் பாச்சலும் படைத்த அவன் எந்தக் கொடுமையும் செய்யப் பின்வாங்காதவன் என்று நிச்சயமாகத் தெரிந்தது.

அடுத்த அறையில் அவர்கள் இருவரும் ஏதோ பேசிக்கொண்டார்கள் என்று தெரிந்தது. அரை மணி நேரம் வரையில் ஏதோ புரட்டுவதும் தள்ளுவதுமாக இருப்பதுபோல் சத்தம் கேட்டது. சொந்த வீட்டுக்காரன்கூட இத்தனை கவலையில்லாமல் தேடமாட்டான்.

"டிரிண் டிரிண்" என்று அழைப்பு மணி கீழேயிருந்து வந்தது. அப்போதுதான் சீனனுக்கு ஷங்கங்கின் ஞாபகம் வந்தது. அவனுக்குத் தகவல் எதுவும் கொடுக்க முடியாதபடி மாட்டிக்கொண்டு விட்டோமே என்று அவன் கவலைப்பட்டான். பாரிஸ்டரின் அந்தச் சயன அறையிலிருந்து வெளியில் போக வேறு வழி எதுவும் இல்லை. ஆனால் பாத்ரூம் பக்கம் போனால் ஜன்னல் வழியாகக் கீழே பார்க்கலாம். அதுவும் கம்பி போட்ட ஜன்னல். ஆதலால் குனிந்து பார்க்க முடியாது.

"டிரிண்—" என்று அழைப்பு மணி காதைத் துளைப்பதுபோல் விடாமல் ஒலிக்கவே பக்கத்து அறையில் சந்தடி நின்றதுடன், சற்றைக்கெல்லாம் யாரோ மாடிப்படியில் இறங்கி வருவதும் காதில் விழுந்தது. சீனன் சட்டென்று ஓடி, சாவித்துவாரத்து வழியாக அடுத்த அறையைப் பார்த்தான். பிரகாசமாக எரிந்த விளக்குகள் அணைந்து, அந்த அறை இருள் மூடிக் கிடந்தது. எதுவும் தெரியவில்லை.

பாரிஸ்டர் சமிக்ஞை மூலம் வேலைக்காரனைப் பார்த்து, கதவைத் தட்டச் சொன்னார். அதற்கும் பதில் ஒன்றும் வரவில்லை. விட்டுவிட்டு அழைப்பு மணி கேட்டது. பத்து நிமிஷம்போல் மணி அடிப்பதும் கதவைத் தட்டுவதும்

தவிர வேறு ஒன்றும் நடப்பதாகத் தெரியவில்லை. அடுத்த அறையில் சந்தடி இல்லை என்று நிச்சயமாகத் தெரிந்ததால் சீனன் தைரியத்தோடு கதவை இழுத்துத் திறக்க முயன்முன். முடியாமல் போகவே அந்தக் கட்டிடமே அதிரும்படி ஓங்கி ஓங்கி இரண்டு கைகளாலும் கதவை இடிக்கத் தொடங்கினுன். கைதான் வலி கண்டதே தவிர, கதவு திறக்கப்படும் வழியாக இல்லை.

* * *

**சைன** ரெஸ்டாரண்டின் வாட்சுமேன் தூங்கி வழிந்துகொண்டிருந்தான். அவனுக்குத் திடீரென்று தூக்கிவாரிப் போட்டது. உள் பக்கத்து அறை ஒன்றில் கைத்துப்பாக்கி வெடித்திருக்கவேண்டும். அவன் வெலவெலத்துப் போய் எழுந்து நின்முன். ஒரு சமயம் தூக்கக் கலக்கத்தில் சொப்பனம் கண்டிருப்போமோ என்று சுற்றுமுற்றும் பார்த்துத் 'திருக் புருக்' கென்று விழித்தான்.

அப்போது யாரோ மாடி வழியாக நிதானமாக, ஆனல் வேகமாக நடந்துவருவது தெரிந்தது.

''வாட்சுமேன், யாராவது பையன் இருந்தால் கூப்பிடு!'' என்று படியில் இறங்கி வந்தவன் அழைத்தான்.

''பையன் இல்லீங்களே!''

''அப்ப நீதான் இந்தப் பெட்டியைத் தூக்கி டாக்ஸியில் கொண்டு போய் வையேன்!'' என்முன் அவன்.

வாட்சுமேனுக்கு அந்த ஆள் யார் என்று தெரிந்துவிட்டது. சீனன் அறைக்கு எதிர் அறையிலிருந்த கிங்கிங்தான் என்பதை அறிந்ததும் அவன் மரியாதையாக அவனேடு போனுன். அவனுடைய அறை பூட்டப்பட்டிருந்தது. வெளியில் இரண்டு பெரிய தோல் பெட்டிகள் பிரயாணத்துக்குச் சித்தமாய் விலாசமெல்லாம் ஒட்டி வைக்கப்பட்டிருந்தன. வாட்சுமேன் அந்த இரண்டு பெட்டிகளையும் தூக்கிக் கொண்டான். கிங்கிங் அந்த அறைச் சாவியும் ஐம்பது ரூபாய் நோட்டுகளையும் அவனிடம் கொடுத்து, ''இந்தா, சாவியை உன் மானேஜரிடம் காலையில் கொடுத்துவிடு. பணத்தை நீ வைத்துக்கொள்! நான் அறையைக் காலி செய்யவில்லை. நாளைக் காலை வரையில் அது என் பொறுப்பில் இருப்பதாகத்தான் கணக்கு. புரிந்ததா? என்னை இரண்டு பேர் தேடி வருவார்கள். கேட்டால் காலையில் வரும்படி சொல்லியனுப்பிவிடு... நான் பெட்டியோடு போய்விட்டேன் என்று யார் கேட்டாலும் சொல்லக்கூடாது. இந்தா, இன்னும் ஒரு பத்து ரூபாய் வேண்டுமானுலும் வைத்துக்கொள்!'' என்று சொல்லிவிட்டு அவன் டாக்ஸியை நோக்கி நடந்தான். வாட்சுமேன் பெட்டி இரண்டையும் தூக்கமாட்டாமல் தூக்கிவந்து வாசலில் தயாராக நின்ற டாக்ஸியில் ஏற்றினுன்.

டாக்ஸி புறப்பட்டு விட்டது. வாட்சுமேன் பணத்தை ஆசையோடு தொட்டுப் பார்த்துக்கொண்டே, கொட்டாவி விட்டான். அவன் உட்கார்ந்திருந்த ஸ்டூலைப் பார்த்தான். பிறகு மெதுவாக அதிலே உட்கார்ந்துகொண்டு, சுவரில் சாய்ந்தான். இரண்டு நிமிஷத்துக்கெல்லாம் தூக்கம் கண்ணை இருட்டிக்கொண்டு வந்தது. ஒரு தடவை வாய்க்கு அருகில் கொண்டுபோய் சண்டிகேசுவரருக்குச் சொடுக்குவதுபோல் சொடுக்கிவிட்டு, அப்படியே கண்ணை மூடிக்கொண்டான். அடுத்த நிமிஷமே அவன் தூக்கத்தில் ஆழ்ந்து போனுன். அதற்குமேல் அந்த வழியாக யார் வந்தார்கள், யார் போனுர்கள் என்பது அவனுக்குத் தெரியாது.

* * *

**பா**ரிஸ்டர் வீட்டின் அழைப்பு மணி ஒலிப்பதை நிறுத்தியது. காரணம், அழைப்பு மணியை அழுத்துவதை நிறுத்திவிட்டு, வேறு வழியாக உள்ளே நுழைய வேண்டியதுதான் என்று வந்தவர்கள் முடிவு செய்ததுதான்.

''கதவுக் கொக்கியைக் கழட்டிப் பிடலாம், சார்!'' என்முன் ஒருவன்

"வேண்டாம்; ஒருவன் மட்டும் வாசல் வழியாக பால்கனிமீது ஏறி, உள்ளே வந்து கதவைத் திறந்து விடட்டும்!" என்றார் மற்றொருவர். அதன்படியே ஒருவன் குரங்குப் பாய்ச்சலாக முன்புறத்து ஜன்னலைப் பிடித்து, அதற்குமேல் மேல் மாடிச் சுவரைப் பிடித்து, எப்படியோ அநாயாசமாக ஏறி முன் முற்றத்தில் போய்க் குதித்தான். அதே சமயத்தில் ஏதோ கறுப்பாக ஓர் உருவம் வாசலைத் தாண்டி ஓடுவது அவனுக்குத் தெரிந்தது. நாயோ, பூனையோ! அவன் பேசாமல் இருந்துவிட்டான். இல்லாவிட்டால் ஒரு சத்தம் போட்டிருந்தால் போதும். கீழே நின்றவர்களில் யாராவது ஒருவர் அந்த உருவத்தைப் பின்பற்றி ஓடியிருப்பார்கள். அவனுக்கு அவ்வளவு தூரத்துக்கு எட்டவில்லை. அவனுக்கு வந்த காரியத்திலேயே நினைப்பு இருந்ததால், முதலில் முன் பக்கத்து அறைக்குள் நுழைந்து, விளக்குகளைப் போட்டு, மாடிப் படிக்கட்டைப் பார்த்து, அதன் வழியாக இறங்கி, உள் பக்கமாகத் தாளிடப்பட்டிருந்த கதவைத் திறந்து விட்டான்.

வெளியில் நின்றிருந்த நாலைந்து பேரும் சரக் சரக்கென்று மிதியடிகள் கூச்சலிட மாடியேறி வந்தார்கள். சீனனும் பாரிஸ்டரும் வேலையாளும் அடைபட்டிருந்த சயன அறையைத் திறந்து விட்டார்கள்.

பாரிஸ்டர் வந்தவர்கள் யாரென்று தெரிந்ததுமே எழுந்து உட்கார்ந்து கொண்டு விட்டார்.

"உங்களுக்கு ஆபத்து ஒண்ணும் இல்லையே?" என்றார் வந்தவர்களில் ஒருவர்.

"இல்லை. ஆனால் நீங்கள் இந்தச் சமயத்துக்கு எப்படி வந்து சேர்ந்தீர்கள், மிஸ்டர் துரைராஜ்!" என்று கேட்டார் பாரிஸ்டர்.

"டெலிபோன் வந்தது, உடனே இங்கே வரும்படி. அப்ப டெலிபோன் நீங்க செய்யலியா? மாஸ்டர் சீனன் குரல்போல இருந்ததே!"

"நாங்கள் இங்கேயேதான் அடைபட்டுக் கிடக்கிறோம். போன் செய்ய வேண்டும் என்று துடிப்புத்தான். முடியவில்லையே என்று வருத்தப்பட்டுக்கொண்டிருந்தோம். ஆனால் யார் செய்ததோ நல்லதாகப் போயிற்று. நாம் அப்புறம் அதைப் பற்றி ஆராயலாம். முதலில் இங்கே வந்திருந்த மோசக்காரர்களைப் பிடிக்க வழி செய்யுங்கள்!" என்றார் பாரிஸ்டர். நடந்ததையெல்லாம் இன்ஸ்பெக்டரிடம் சுருக்கமாகக் கூறினார். பங்களாவைச் சுற்றி இரண்டு ஜவான்கள் யாராவது ஒளிந்துகொண்டிருக்கிறார்களா என்று தேடினார்கள்.

"இரண்டு பேர் வேண்டுமானால் இங்கே இருக்கட்டும்; பாக்கிப்பேர் உடனே சைனா கூ-கூ ஹோட்டலுக்குப் போய், அவனைக் கையோடு கையாகப் பிடிக்கச் சொல்லுங்கள்!" என்றான் சீனன்.

வெளியில் ஓடி தன்னுடைய காரைப் பார்க்கப் போன சீனன் ஏமாற்றத்துடன் திரும்பி வந்து, "ஒரு சமயம் ஷங்கங் போன் செய்திருப்பானோ, ஆளை வெளியிலேயே காணவில்லையே!" என்றான்.

"இருக்கும் இருக்கும்" என்றார் இன்ஸ்பெக்டர். குரல் ஒரு பையனுடைய குரல்தான். பெயரைக் கேட்டதற்கு, "சீனன்" என்றுதான் சொன்னான்.

"அப்போ அது நிச்சயம் ஷங்கங்தான்! சந்தேகமில்லை! முதலில் ஹோட்டலுக்குப் போய் அவன் இருந்தாலும், வந்தாலும் அவனை உடனே பிடிக்க ஏற்பாடு செய்யுங்கள். துராக்கிருதமாக இங்கே நுழைந்து, பாரிஸ்டரின் மேஜை டிராயர் எல்லாவற்றையும் தேடினவன் அவன்தான். அவனுடைய கையாள்தான் எங்களை இந்த அறையில் அடைத்து வைத்தவன்" என்றான் சீனன்.

"சரி; இதோ இப்பவே போகிறோம்.." என்று புறப்பட்டார் துரைராஜ்.

"போய்ப் பயனில்லை; பட்சி பறந்தோடி விட்டது!" என்று பின்னால் ஒரு குரல் கேட்டது.

எல்லாரும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தார்கள். ஷங்கங்தான் வண்டியிலிருந்து இறங்கி வந்து நின்றான்.

(தொடரும்)

# பொல்லாத கிழவன்!

**பி. கே. சாமி**

பதினைந்து வருஷங்களுக்கு முன்பு.

அப்போது பாளையங்கோட்டைக் கல்லூரி ஒன்றில் கதிரேசன், சீனியர் இண்டர்மீடியட் மாணவன். ஹாஸ்டலில் அறுபதாம் நம்பர் அறை அவனுடையது.

ஒரு நாள் விடுமுறை தினத்தன்று பிற்பகல் நான்கு மணி இருக்கும். அவன் அறைக் கதவை யாரோ தட்டும் சப்தம் கேட்டது. எழுந்து வந்து திறந்து பார்த்தால், வெளியே கிழவன் வேலாயுதம் நின்றுகொண்டிருந்தான்!

கதிரேசனின் சொந்த ஊராகிய பெருமாள்புரம் கிராமத்தைச் சேர்ந்தவனே கிழவன். சுமார் ஐம்பது மைல் தூரத்திற்கு அப்பால் இருந்த அந்தக் கிராமத்திலிருந்து எப்படி வந்துவிட்டான் என்று வியப்பாக இருந்தது கதிரேசனுக்கு.

கிழவன் கதிரேசனைக் கூர்ந்து கவனித்தான். பாவம், அவனுக்குப் பார்வை மிகவும் மங்கிவிட்டதா, என்ன? "...உம்...தம்பி...கதிரேசன் அறை இதுதானே?.." என்று இழுத்தாற்போலக் கேட்டான் அவன்.

"என்ன பெரியவரே, என்னைத் தெரியவில்லையா உமக்கு? நான் தான்! இப்படி உள்ளே வாரும்" என்று அறைக்குள் கூட்டிச் சென்று உட்கார வைத்தான் கதிரேசன்.

பிறகு, "என்ன சமாசாரம் பெரியவரே? ஏது இவ்வளவு தூரம்?" என்று விசாரித்தான்.

அதற்குக் கிழவன் சொன்ன பதிலின் சாரம் இதுதான்:

வெகு நாட்களுக்கு முன் பிழைப்புத் தேடி ஊரைவிட்டு வெளியேறிய அவனுடைய ஒரே மகள் ரஞ்சிதமும், மருமகன் பொன்னையாவும் தற்சமயம் திருச்செந்தூரில் வசித்து வருவதாகக் கேள்விப்பட்டானும். அவர்களைப் போய்ப் பார்த்துவிட்டு, நல்ல நிலைமையில் ஜீவனம் நடந்து கொண்டிருந்தால் செலவுக்கு ஏதாவது பணம் வாங்கிப் போகலாம் என்ற எண்ணத்துடன் சென்றானும். ஆனால் எவ்வளவு தேடியும், திருச்செந்தூரில் அவர்களைக் காணவே முடியவில்லை. அவர்கள் அங்கே இல்லை என்று தான் ஊகிக்க வேண்டியிருந்தது. கைச்செலவுக்கு வைத்திருந்த பணமும் தீர்ந்துவிடவே, வேறு வழியின்றி ஊர் திரும்ப ரெயிலேறி விட்டான் கிழவன். ஆனால் பாளையங்கோட்டை ஸ்டேஷன் சமீபித்தபோது, அவன் டிக்கெட் இல்லாமல் பிரயாணம் செய்வதைக் கண்டுபிடித்த பரிசோதகர், அவனை அங்கேயே இறக்கி விட்டுவிட்டார்.

இனிமேல் என்ன செய்வது என்று வெகுநேரம் திகைத்துப் போய் உட்கார்ந்திருந்த கிழவனுக்கு, அந்த ஊர்க் காலேஜில் படிக்கும் கதிரேசனின் ஞாபகம் வந்ததாம். ஊர் போக ரெயில் சார்ஜுக்கும் செலவுக்குமாகச் சேர்த்து அவனிடம் மூன்று ரூபாய் கடன் வாங்கிப் போகலாம் என்ற எண்ணத்துடன் வந்திருக்கிறான்.

"இல்லை என்று சொல்லாமல் கொடுக்க வேண்டும், தம்பி! நான் வேறு யாரிடம் கேட்கப் போகிறேன்? உன்னைத்தான் நம்பி வந்திருக்கிறேன்" என்று கிழவன் கதிரேசனை நோக்கினான்.

கதிரேசனுக்கு மனத்திற்குள் மிகவும் சங்கடமாயிருந்தது. அவனுடைய தகப்பனார் அனுப்பும் பணம், காலேஜுக்கும் ஹாஸ்டலுக்கும் 'பீஸ்' கட்டுவதற்கும்தான் சரியாக இருக்குமே ஒழிய, நாலணாகூட மிச்சம் இராது. சில்லறைச் செலவுகளுக்கு, அவன் முதன் முதல் ஊரிலிருந்து வரும்போது கொண்டு வந்த இருபது ரூபாய்ப் பணத்திலிருந்து எடுத்துக் கொள்வது

வழக்கம். அந்த இருபதும் ஏற்கனவே தீர்ந்துவிட்டது. 'பீஸ்' கட்டுவதற்கு என்று தயாராக வைத்திருந்த பணம் மட்டுமே இருந்தபடியால், அவன் கொடுப்பதற்கு யோசனை பண்ணியது இயற்கையே. ஆகவே, அவன் கிழவனைப் பார்த்து, "மன்னிக்க வேண்டும், பெரியவரே! இப்போது அப்படிக் கொடுப்பதற்கு என்னிடம் வசதி இல்லாமல் இருக்கிறதே! நான் என்ன செய்யட்டும்?" என்று வருத்தப்பட்டான்.

"அப்படி யெல்லாம் சொல்லப்படாது தம்பி! மூன்று ரூபாய் தானே கேட்கிறேன்?" என்று கேட்டான் கிழவன், நயமான குரலில்.

"என்னுல் முடிந்தால் தராமல் இருப்பேனு பெரியவரே! மூன்று ரூபாய்தானே என்ருல், பத்தாம் தேதி 'பீஸ்' கட்டுவதற்கு மூன்று ரூபாய் குறையுமே! அதற்கு நான் எங்கே போவது? இந்த ஹாஸ்டலில் கடன் வாங்குவதும் கொடுப்பதும் பெரிய குற்றங்கள்!"

"அவ்வளவுதானே! நான் ஊருக்குப் போனவுடன் மூன்று ரூபாய் மணியார்டர் செய்துவிடுகிறேன்; போதுமா?"

"உமக்கு விஷயம் தெரியாது ஐயா! பத்து என்ருல் பத்தாம் தேதி கண்டிப்பாகப் 'பீஸ்' கட்டிவிட வேண்டும் இங்கே! இல்லையென்ருல் கழுத்தைப் பிடித்து வெளியே அனுப்பிவிடுவார்கள்!"

"நான்தான் அதற்குள் அனுப்புகிறேன் என்கிறேனே! போனவுடன் எப்பாடு பட்டாவது மூன்று ரூபாய் மணியார்டர் செய்துவிட்டு மறுகாரியம் பார்க்கிறேன்; பிறகு என்ன? தயது செய்து மறுக்காதே!"

"சரியாய்ப் போச்சு! நீர் கொஞ்சம் அசட்டையாய் இருந்துவிட்டால் நான்தான் இங்கே திண்டாட வேண்டும். வேண்டாம் ஐயா வேண்டாம்; நீர் போய் வாரும்!"

கிழவன் அவனை விடவில்லை. கையைப் பற்றின வண்ணம், "வீட்டிலே இரண்டு ரூபாய் இருக்கிறது தம்பி! என் தம்பி மகன் எனக்கு ஒரு ரூபாய் தரவேண்டும். அதையும் வாங்கிச் சேர்த்து எப்படியாவது அனுப்பிவிடுகிறேன்" என்று மன்ருடினுன்.

கிழவனுக்குப் பணம் தந்தால் ஒழிய, ஆள் நகரமாட்டான் என்று கண்டுகொண்டான் கதிரேசன்.

"அப்படியானுல் இரண்டு ரூபாய் மட்டும் வாங்கிக் கொள்ளும்! ரெயில்சார்ஜ் ஒரு ரூபாய் எட்டணு போக அரை ரூபாய் மிச்சம் இருக்குமே. அது போதும் செலவுக்கு. ஆனுல் ஒன்று; இன்று தேதி ஐந்து. நீர் ஊர் போய்ச் சேர்ந்தவுடன் நாளையே கண்டிப்பாக மணியார்டர் செய்துவிடவேண்டும். மறந்துவிடக் கூடாது' என்று கூறிக்கொண்டே பெட்டியைத் திறக்கச் சென்ருன்.

"இவ்வளவு தூரம் சொல்லியிருக்கும்போது மறப்பேனு தம்பி? நிச்சயம் அனுப்பிவிடுகிறேன்."

கிழவன் அவ்வளவு நேர்மையாக நடக்கக் கூடியவன்தானு என்று சந்தேகமாயிருந்தது கதிரேசனுக்கு. இருந்தபோதிலும் அவனை எப்படியாவது அங்கிருந்து கிளப்பினுல் போதும் என்று நினைத்தான். எனவே, பெட்டியிலிருந்து இரண்டு ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்துக் கொடுத்தான் கிழவனிடம். ஒரு துண்டுப் பேப்பரை எடுத்து அதில் தன்னுடைய விலாசத்தை எழுதினுன்.

விலாசம் எழுதப்பட்ட துண்டுச் சீட்டையும் ரூபாய் நோட்டுடன் மடியில் வைத்துக் கட்டிக் கொண்ட கிழவன், உடனேயே, "போய் வருகிறேன்" என்று விடைபெற்றுக்கொண்டான்.

**ஹா**ஸ்டல் காம்பவுண்டைத் தாண்டி, சுவர் ஓரமாகச் சற்றுத் தூரம் சென்றவுடன் ரோடு மேற்கு நோக்கித் திரும்புகிறது. அந்த இடத்திலிருந்து திரும்பிப் பார்த்தால், ஹாஸ்டல் பார்வையில் விழாதபடி பெரிய மரங்கள் மறைத்துக் கொண்டிருக்கின்றன.

கிழவன் நடந்துகொண்டே மடியில் கைவிட்டுத் துழாவினுன். "இந்தப் பையனுக்கு இருக்கிற கஞ்சத்தனத்தைப் பார்!.. இரண்டு ரூபாய்க் காசுக்கு மூக்கால் அழுகிருனே இப்படி?.. ஊருக்குச்


சென்று இவனுக்குப் பணம் அனுப்பிஞல்தானே விலாசம் வேண்டும்?'' என்று முணு முணுத்தவாறே விலாசம் எழுதிய சீட்டைக் கையில் எடுத்தான். அடுத்த கணம் அதைக் கசக்கிச் சுருட்டி எறிந்தான்!

**மா**லை ஐந்தரை மணி சுமாருக்கு திருநெல்வேலி ஜங்ஷனில் ரெயில் புறப்படுகிறது. டிக்கெட் ஜன்னலில் ஏராளமான கூட்டம். அங்கே

என்ன ஆச்சரியம்! கான்ஸ்டபிள் அதைக் கையில் வாங்கவே இல்லை!

''என்ன ஐயா இது? எவன் விலாசமோ எழுதியிருக்கிற சீட்டைக் கொண்டு வந்து ரூபாய் நோட்டு என்று கொடுக்கிறீர்? எவனே உம்மை நன்ருக ஏமாற்றி விட்டான் போம்!'' என்று கூறிப் போய்விட்டான்.

அவ்வளவுதான்; கிழவன் காலடி



நின்ற கிழவன் ஒரு கான்ஸ்டபிளை மெல்ல அணுகி, ''தயவு செய்து சாத்தூருக்கு ஒரு டிக்கெட் வாங்கித் தரமாட்டீர்களா, ஐயா? தள்ளாத கிழவன்!'' என்று கெஞ்சிக் கேட்டான். போலீஸ்காரனும் மனமிரங்கி, ''சரி, பணத்தை எடும்!'' என்ருன்.

''இந்தாருங்கள் இரண்டு ரூபாய்!'' என்று நோட்டை எடுத்து நீட்டினுன் கிழவன்,

யில் உள்ள பூமி அப்படியே நழுவிப் போவது போலிருந்தது!

**ஏ**றக் குறைய அதே சமயத்தில், அந்தி மயங்கும் வேளையில், காற்ருடச் சற்று வெளியே உலாவ வந்த கதிரேசன், ரோடு திரும்பிக் கொஞ்ச தூரம் மேற்கே வந்ததும், அங்கே கல்லிடுக்கிலே கசங்கிக் கிடந்த ஒரு 'இரண்டு ரூபாய் நோட்டு'த் தாளைத் தற்செயலாகக் கண்டு வியந்து கொண்டிருந்தான்.




## டும்! டும்!! டும்!!!

மாலைநேரம் வந்திடும்
மஞ்சள் வெயில் வீசிடும்
வேலைதீர்ந்த ஆட்கள்கூட்டம்
வீடுநோக்கிச் சென்றிடும்.


அந்திநேரம் ஆயிடும்
அந்தகாரம் வந்திடும்
மந்தைவெளியில் மேய்ச்சல்தீர்ந்து
மாடு தொழுவம் வந்திடும்.

கூட்டமாகப் பட்சிகள்
கூடுதிரும்பிச் சென்றிடும்
ஆட்டம் ஆடிக்களிக்கும் சிறுவர்
ஆரவாரம் ஓய்ந்திடும்.

இருளுலகைச் சூழ்ந்திடும்
இன்ப அமைதி வந்திடும்
தாரகைகள் நிலவைக்காணத்
தவித்து நின்று ஏங்கிடும்.

வண்ணநிலவு சூழ்ந்திடும்
வெண்மை ஒளியைத் தந்திடும்
கண்ணைச்சிமிட்டி விண்ணில்மீன்கள்
களித்துநடனம் செய்திடும்.

R. சரஸ்வதி, நாகர்கோவில்.




## அன்பு கொண்டேன்

கண்ணன் மலரைக் காணவே
எண்ணி எண்ணி ஏங்கியே
இங்கும் அங்கும் அலைந்தபின்
இன்று கண்டேன் கடையிலே.
மனத்தைக் கவர்ந்த கண்ணனை
மடியி லிருந்த பணத்தினால்
எனதாக்கிக் கொண்ட பின்
ஏகினேன் என் இல்லமே
வாங்கி வந்த பாலனை
ஏங்கி யுள்ள கண்களால்
வாஞ்சை பொங்க நோக்கியே
நெஞ்சம் மகிழ வாசித்தேன்
மகிழ்வு தந்த கண்ணனை
மனத்தை விட்டு என்றுமே
அகற்ற முடியா வகையிலே
அன்பு கொண்டேன் அவனிடம்.

—வே. கருப்பையா, சிவகங்கை.

* * *

## நவீன அழைப்பிதழ்

வகுப்பிலே ஆசிரியர் வராததால் வேறு ஆசிரியர் வந்து மாணவர்களுக்குக் கதை சொல்லிக்கொண்டிருந்தார். எல்லோரும் கேட்டுக்கொண்டிருந்தார்கள். ஆனால் கோமாளிக் குப்பு மட்டும் தலையைக் குனிந்துகொண்டு ஏதோ எழுதிக்கொண்டிருந்தான். வந்திருந்த வாத்தியார் இதைக் கவனித்துவிட்டார். இத்தனை சுவாரஸ்யமாகச் சொல்வதைக் கேட்காமல் அவன் மட்டும் அப்படி என்ன எழுதுகிறான் என்று அவருக்குக் கோபம் வந்தது.

''அப்புறம் அந்தத் தாண்டவராயன் என்ன பண்ணினான்?'' என்று அவர் குப்புவைக் கூப்பிட்டுக் கேட்டார்.

அவன் குனிந்து எழுதிக்கொண்டிருந்ததைக் கண்ட மாணவர்கள் அவன் சரியாக மாட்டிக்கொண்டான் என்று எண்ணி அவனைப் பார்த்துச் சிரித்தார்கள்.

''அப்புறம் அந்தத் தாண்டவராயன் என்ன பண்ணினான்?'' என்று வாத்தியார் மீண்டும் பரிகாசமாகக் கேட்டார்.

''இந்த அழைப்பிதழ்களை எல்லாருக்கும் தபாலில் அனுப்பினான்!'' என்றான் அவன், ஒரு கணமும் தயங்காமல்.

வாத்தியார் அசந்துவிட்டார். மாணவர்கள் விஷயம் புரியாமல் திகைத்தார்கள். ''எங்கே, அதைக் கொண்டுவா, பார்ப்போம்!'' என்றார் அவர்.

பயந்துகொண்டே குப்புசாமி தான் எழுதிக்கொண் டிருந்த காகிதத்தைக் கொண்டுபோய் நீட்டினான். அவனுக்கு அடி சரியானபடி விழப் போகிறது என்று மற்ற மாணவர்கள் சிரித்தார்கள்.

ஆனால் குப்பு எழுதியதைப் படித்த ஆசிரியர் விழுந்து விழுந்து சிரிக்கத் தொடங்கவே மற்றவர்கள் சிரிப்பை நிறுத்திவிட்டு அவனை வியப்போடு பார்த்தார்கள்.

குப்பு எழுதிய அழைப்பிதழ் இதுதான்:

அந்தரத் தபால்! இராவணன் துணை ஆகாய வழி!

கடிமண அழைப்பிதழ்

நிகழும் சூன்ய வருஷம் பீடை மாதம் சனி பிடித்த கிழமையில் நடு நிசி வேளையில்

| எனது குமாரன் | பேயோட்டி பிடாரியா பிள்ளை குமாரி |
|---|---|
| அல்பாயுசு மட்டிமாணிக்கம் | வாயாடி அமங்களம்மாளை |

அபகரித்துப்போய், கடிமணம் புரிவதாக பெரும் கேடிகளால் முடிவு செய்யப்பட்டு, ஷை முகூர்த்தம் மயானத்தில் ஆற்றங்கரை ஆலமரத்தடியில் நடத்துவதாக இருக்கிறபடியால் தாங்கள் தங்கள் குடும்பத்தோடு இரண்டு நாள் பின்னதாகவே வரக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

முதல் நாள் — மாமியார் - மருமகன் வாக்குவாதம்
இரண்டாம் நாள் — மாமனார் - மருமகள் அடிதடிச் சண்டை

நிகழ்ச்சிக் குறிப்பு

பல்லில்லாப் பக்கிரிசாமி } – அழுமூஞ்சி பிரதர்ஸ் - வாய்ப்
நாக்கில்லா நாராயணசாமி } பாட்டு
செவிட்டுச் செல்லப்பன் — மிருதங்கம்
விரலில்லா வீராசாமி — பிடில்
கையில்லாத கந்தசாமி — கடம்

தங்கள் வரவை தடிகொண்டு எதிர்நோக்கும், தாண்டவராயன்.

—பி. ஜி. சுப்பிரமணியன், சென்னை-17.

* * * *

## அது யார்?

**வ**யதான மனிதர் ஒருவர் ஒரு பையனை, "இங்கே வாடா!" என்று கூப்பிட்டார். பையன் அவரை ஒரு முறை முறைத்துப் பார்த்தான். பிறகு, "ஏன் ஐயா, நீர் எப்படி என்னை 'வாடா' என்று குறைவாகக் கூப்பிடலாம்? நீரும் குள்ளம்: நானும் குள்ளம். நீரும் பொடி போடுகிறீர்; நானும் போடுகிறேன். நீரும் ஒரு 'கப்சா' ஆசாமி: நானும் அண்டப் புளுகன். நீரும் கெட்ட எண்ணம் உடையவர்; நானும் அப்படியே. உம்மையும் ஊரில் எல்லாரும் முட்டாள் என்கிறார்கள்; என்னையும்தான் அப்படிச் சொல்கிறார்கள். உம்மைவிட நான் எந்த விதத்தில் குறைந்தவன் என்று கேட்கிறேன். பார்க்கப் போனால் உயர்ந்தவன் என்றுகூடச் சொல்லலாம். ஏனெனில் உம்முடைய தலை வழுக்கை; என் தலை கிராப்பு. யார் ஐயா ஒசத்தி?" என்று சரிமாரியாகக் கேட்டுவிடுவான் போல இருந்தது. ஆனால் கேட்கவில்லை. அவன் அப்படி எண்ணினான் என்று எப்படித் தெரியும் என்கிறீர்களா? தெரியும், அந்தப் பையன் நான்தான்.


—சிறுகதை.

—அழகரசன். ஸ்ரீராமசமுத்திரம் (திருச்சி)

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE M. L. J. PRESS PRIVATE LTD., MADRAS-4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

கண்ணன் தொடர்கதைப் போட்டியில்

## பரிசு பெற்ற இளைஞர்கள்





**எஸ். ராமநாதன் (சுருமீன்)**
வயது: 18
கும்பகோணம் கல்லூரி மாணவன்
விலாசம்: அலைவந்தபுரம்
சுவாமிமலை அஞ்சல்.

**தே. பார்த்தசாரதி**
வயது: 18
திருச்சி செயிண்ட் ஜோசப்
கல்லூரி மாணவன், 110. அடைய
வளஞ்சான் தெரு, ஸ்ரீரங்கம்.

---

## விடைகள்

**உனக்குத் தெரியுமா?**

1. விபத்தில் எஞ்சியவர்களை அடக்கம் செய்வானேன்? காயம் பட்டிருந்தால் சிகிச்சைக்கு ஆஸ்பத்திரிக்கல்லவா அனுப்பவேண்டும்?

2. குள்ளமணி.

3. அணில் முட்டை இட்டால் அல்லவா உரிமை கொண்டாடுவதற்கு? அதுதான் குஞ்சு பொறிக்கும் இனத்தைச் சார்ந்ததாயிற்றே!

4. பின்னம் 6/9.

**வேடிக்கைப் புதிர்கள்:** 1. ஒன்று எரியும் நெருப்புக் குச்சியாக இருக்கவேண்டும். 2. கண்மணி. 3. எழுத்து. 4. வழுக்கைத்தலை மனிதர். 5. தேசப்படம். 6. மழுங்கியிருப்பதால். 7. காலச் சக்கரம். 8. நெருப்பு. 9. நடுவே தடுப்பு இருக்கவேண்டும்.

(Regd, as Newspaper in Ceylon.) **Reg. No. M. 5542**

# பரிசுக்குரிய புத்தகங்கள்

கண்ணன்

குழந்தைகளுக்கு நண்பர்கள், உறவினர்கள் தரக்கூடிய சிறந்த பரிசு கண்ணன் வெளியீடுகள். இவற்றைப் பொங்கல் சமயத்தில் பரிசுப் பாக்கெட்டுகளாகக் குறைந்த விலையில் கொடுத்து வந்தோம். இந்த வருஷம் வேண்டிய புத்தகங்களை மட்டும் வாங்கிக்கொள்ளலாம். கண்ணன் வெளியீடுகளில் சில இப்போது கைவசம் இல்லை. சிலர் முன்பு பரிசுப் பாக்கெட்டுகளாகவும் வாங்கியிருப்பார்கள். அதற்காகவே இந்த மாறுதல்.

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| 1. | லீடர் மணி - ஆர்வி | 1 | 8 |
| 2. | சந்திரகிரிக் கோட்டை - ஜனு | 1 | 4 |
| 3. | அசட்டுப் பிச்சு - ஆர்வி | 1 | 0 |
| 4. | அபாயச் சங்கு - நீலம் | 0 | 8 |
| 5. | விளையும் பயிர் - கி. வா. ஜ. | 0 | 8 |
| 6. | ஜக்கு - ஆர்வி | 0 | 8 |
| 7. | ஜம்பு - ஆர்வி | 0 | 8 |
| 8. | விஞ்ஞானம் பேசுகிறார் - பெ. நா. அ. | 0 | 8 |
| 9. | மின்னல் அரக்கன் - ஜனு | 0 | 8 |
| 10. | ஏரிக்கரை மாளிகை - ஜனு | 0 | 8 |
| 11. | கழுகும் கிளியும் - 'சோமசன்மா' | 0 | 8 |
| 12. | தவளையும் காளையும் - 'சோமசன்மா' | 0 | 8 |
| 13. | பாரசீக ரோஜா - சித்திரக் கதை | 0 | 5 |
| 14. | குளிகைத் தீவு - சித்திரக் கதை | 0 | 4 |
| 15. | மாஸ்டர் பாலகுமார் - சித்திரக் கதை | 0 | 4 |
| 16. | தூங்கும் அழகி - சித்திரக் கதை | 0 | 4 |
| 17. | நீச்சல் பழக்கம் - பயிற்சி | 0 | 3 |
| 18. | கோழி விதைத்த நெல் - பாட்டுக் கதை | 0 | 3 |
| 19. | பார்வதியும் ஏழு சித்திரக்குள்ளர்களும் | 0 | 3 |
| 20. | என் பேர் என்ன? | 0 | 3 |

ரூ. 5/-க்கு மேல் ஒரே சமயத்தில் வாங்குபவர்களுக்கு 20% கமிஷன் உண்டு. கிண்டியிலுள்ள சர்வகலாசாலை நூற்றாண்டு விழா கண்காட்சி 171 - 172 ஸ்டால்களிலும் கிடைக்கும். தபால் செலவு தனி. வி. பி. பி. கிடையாது. (இலங்கை தவிர).

**கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை -4.**